தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

விலை ரூ.15 – மலர் 21 – இதழ் 11 – மார்ச் 2020

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

மகளிர் மேம்பாட்டிற்கான புதிய அறிவிப்புகள்...

■ திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர் (பொ)
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

அன்பு சகோதரிகளே,

உங்கள் அனைவருக்கும் சர்வதேச மகளிர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, உங்களுடன் என்னுடைய கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறேன். பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்ட தமிழகத்தின் முதல் பெண் மருத்துவரான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார், மகாத்மா காந்திஜியால் போற்றப்பட்ட தில்லையாடி வள்ளியம்மை, கைம்பெண்கள் மறுமணத்திற்காகப் போராடிய தர்மாம்பாள் அம்மையார் உள்ளிட்ட ஏராளமானவர்களை இம்மகளிர் தினத்தில் நினைவுகூருவது நம் கடமையாகும்.

"மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் அம்மா!" என்ற பாடல் வரிகளுக்கேற்ப பெண்களாய் பிறந்த அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்களே. தங்களைச் சார்ந்தவர்களின் முன்னேற்றத்தை மட்டும் கருத்தில் கொள்ளாமல் அனைத்துத் தரப்பினரின் முன்னேற்றத்திற்கும் தங்களின் பங்களிப்பைப் செலுத்தி வருவதில் பெண்கள் தன்னிகரற்றவர்கள். குடிசைத் தொழில் மூலம் சிறு பொருட்கள் தயாரிப்பது முதல் விண்வெளி ராக்கெட் தயாரிப்பது வரையிலும் பெண்கள் தங்களை முழு ஈடுபாட்டுடன் ஈடுபடுத்திக் கொண்டு வருவது மேலும் சிறப்பிற்குரியது.

இன்று பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தையும் அவர்கள் படைத்துள்ள சாதனைகளையும் பார்க்கும் பொழுது "வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்" என்ற பாடல் வரிகளே நினைவிற்கு வருகின்றது. படிப்பறிவில்லாத பெண்களைக் கூட தொழில் முனைவோராக முன்னேற்றிய பெருமை மகளிர் சுய உதவிக் குழு இயக்கத்திற்கே உண்டு.

ஆண்களுக்கு நிகராய் இன்று சுய உதவிக் குழு மகளிரும் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வெற்றிப் பெற்று வருவதைப் பார்க்கும் போது "ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்" என்ற மற்றொரு பாடல் வரிகளும் இங்கு நினைவில் மிளிர்கிறது.

பெண்களின் முன்னேற்றத்திற்காக நம் தமிழக அரசும் பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறது. அரசின் திட்டங்களை செயல்படுத்தி பெண்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் செயல்பட்டு வருகிறது. திட்டங்களை வெற்றி பெறச் செய்வது, உங்களின் அயராத உழைப்பிலும், தளராத செயல்பாட்டிலும்தான் உள்ளது என்பதை அறிந்து நீங்கள் செயல்பட்டு வருகிறீர்கள். உங்களுக்கு நம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் துணை நிற்கும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது, கோடைக்காலம் துவங்கி விட்டது. மார்ச் முதல் ஜூலை மாதம் வரையில் நிலவும் கோடையின் தாக்கம் இவ்வாண்டு சற்று அதிகம் இருக்கும் என்று வானியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். எனவே, கோடையை சமாளிக்க நாம் தயாராக இருக்க வேண்டும். உடுத்தும் ஆடை முதல் உண்ணும் உணவு வரையில் வெப்பத்தை தணிக்கும் வகையிலான பொருட்களைப் பயன்படுத்த வேண்டும். வேதிப்பொருட்கள் கலந்த குளிர் பானங்களைத் தவிர்த்து, மோர், இளநீர், தர்பூசணி, வெள்ளரி போன்ற இயற்கை உணவுகளையே அதிகம் சாப்பிடுவது உடலுக்கு குளிர்ச்சியைத் தரும்.

கோடையில் தாக்கும் வெப்ப நோய்களில் இருந்து நம்மைக் காத்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். செயற்கை இழை ஆடைகளைத் தவிர்த்து பருத்தி ஆடைகளை அணிய வேண்டும். வெளியில் செல்லும் போது குடையைப் பயன்படுத்துவது மேலும் சிறப்பிற்குரியது. முதியோர்கள், குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் போன்றவர்கள் வெயில் அதிகம் இருக்கும் நேரங்களில் வெளியில் செல்வதை தவிர்த்தல் நல்லது. தண்ணீரின் தேவை அதிகம் இருப்பதால் அதை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். மேற்கண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முறையாகக் கடைப்பிடித்து கோடையின் வெப்பத்திலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என உங்களின் சகோதரியாக இருந்து உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர் (பொ)

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் | wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

protncdw1@gmail.com

குறளும்-பொருளும்

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்

கற்பு நெறியில் தன்னையும், தன் கணவனையும் காத்துக் கொண்டு, குடும்பத்திற்கு பெருமை சேர்க்கும் புகழையும் காப்பாற்றிக் கொள்வதில் உறுதி குலையாமல் இருப்பவள் பெண்.

உள்ளே...

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் மற்றும் பணிபுரியும் பெண்களுக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் வாங்க மானியம் வழங்குதல் **05**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், அறிவித்த அறிவிப்புகள் **06**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அரங்கிற்கு விருது **08**

சர்வதேச மகளிர் தின விழா கொண்டாட்டம் **18**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் **20**

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் செயல்பாடுகள் **28**

பணிபுரியும் மகளிருக்கு மகிழ்ச்சி தரும் திட்டம் **32**

தமிழகத்தில் செயல்பட்டுவரும் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக் குழுக்கள் குறித்த விபரங்களை ஆவணப்படுத்திட தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பிரதிநிதி வருகை **33**

→ முற்றம் வாசகர்களுக்கு ஓர் முக்கிய அறிவிப்பு

அச்சு மற்றும் வெளியீட்டு செலவினங்கள் அதிகரித்துள்ள காரணத்தினாலும், தற்போது மாறிவரும் சூழலுக்கேற்ப முற்றம் இதழை புதிய தொழில்நுட்ப வடிவில் மாற்றியமைக்கப்பட வேண்டியுள்ள காரணத்தினாலும் சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியாக விளங்கி வரும் நமது முற்றம் இதழின் விற்பனை விலை மற்றும் ஆண்டு சந்தா கட்டணங்கள் ஏப்ரல் 2020 முதல் கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்பட உள்ளது என்பதை அனைத்து முற்றம் வாசகர்களுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

முற்றம் இதழின் தனிப்பிரதி / சந்தா விபரம்	தற்போதைய விலை	ஏப்ரல் 2020 முதல் மாற்றம் செய்யப்படவுள்ள புதிய விலை	ஏப்ரல் 2020 முதல் முற்றம் வாசகர்களுக்கான சலுகை விலை
முற்றம் இதழின் தனிப்பிரதி	ரூ. 15	ரூ. 20	ரூ. 20
ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180	ரூ. 240	ரூ. 200 (தள்ளுபடி ரூ. 40)
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360	ரூ. 480	ரூ. 400 (தள்ளுபடி ரூ. 80)
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540	ரூ. 720	ரூ. 600 (தள்ளுபடி ரூ. 120)

முற்றம் இதழின் வாசகர்கள் அளித்து வரும் தங்களின் ஆதரவினை இவ்விதழுக்குத் தொடர்ந்து வழங்கி உற்ற தோழியாய், உறுதுணையாய் என்றும் இருக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

– முற்றம் இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்

மலர் 21
இதழ் 11
மார்ச் 2020
விலை ரூ.15

● **கௌரவ ஆசிரியர்கள்**

திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர் (பொ),
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

● **பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்**
எஸ். சின்னப்பன், செயலர், முற்றம்

● **ஆசிரியர் குழு**

கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜி. சரஸ்வதி கணேசன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

சி. கே. வீரணன், கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

கே. சுமதி, கூடுதல் இயக்குநர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

● **நிர்வாக ஆசிரியர்**
சி. சந்தோஷினி சந்திரா, பொது மேலாளர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

● **நிதி நிர்வாகம்**
அ. நிருபா ராணி, நிதி ஆலோசகர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

● **பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்**
சு. பாபு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

● **துணை ஆசிரியர்: ஏ. கண்ணன்**

● **முதுநிலை கணக்காளர்: சு. சசிகலா**

● **பிழை திருத்துபவர்: எஸ். எஸ். ரவிச்சந்திரன்**

● **கணினி வடிவமைப்பு: டி. ராஜரத்தினம்**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை - 600 034.

தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

"சாதனைப் பெண்களுக்கு வாழ்த்துகள்...!"

அன்புள்ள வாசகர்களுக்கு,

அனைத்துத் துறைகளிலும் பல்வேறு சாதனைகளைப் படைத்து வரும் சுய உதவிக் குழு மகளிர் அனைவருக்கும் சர்வதேச மகளிர் தின வாழ்த்துகளை முற்றம் தெரிவித்துக் கொள்கிறது.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்ற பாடல் வரிகளுக்கு ஏற்ப இன்று அனைத்துத் துறைகளிலும் பெண்கள் தங்களின் பங்களிப்பை சிறப்புற செலுத்தி வருகின்றனர். பெண்கள் மன உறுதி கொண்டவர்கள், தடைகளைத் தவிர்க்கும் வலிமை மிக்கவர்கள் என்பதற்கு சுய உதவிக் குழு மகளிர் முன்னுதாரணமாக உள்ளனர்.

பொருளாதார சுய சார்பு கொண்டவர்களாக பெண்களை உருவாக்கும் வலிமை படைத்த சுய உதவிக் குழு இயக்கம் இன்று மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்றுள்ளது. இந்த வளர்ச்சியும், சுய உதவிக் குழு பெண்கள் பெற்றுள்ள வெற்றியும் பாராட்டுக்குரியது. சுய உதவிக் குழுவினரின் ஒற்றுமையும், அவர்களின் அயராத உழைப்பும்தான் இதற்குக் காரணம்.

உலகெங்கும் சாதனைகள் படைத்து வரும் பெண்கள் அனைவரையும் பெருமைப்படுத்தும் வகையில் மகளிர் தினத்தைக் கொண்டாடி பெண்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்போம் என்று உறுதியேற்போம்.

"கொரோனா" வைரஸ் குறித்து யாரும் அதிகம் பயப்படத் தேவையில்லை. "கொரோனா" வைரஸ் பரவுவதை தடுக்கும் வகையில் நம் தமிழக அரசும் பல்வேறு சுகாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன், விளம்பரங்கள் மூலம் மக்களுக்கு பல்வேறு அறிவுறுத்தல்களையும் வழங்கியுள்ளது. பொதுமக்களாகிய நாம் அரசின் அறிவுறுத்தல்களை ஏற்று அரசின் நடவடிக்கைகளுக்கு துணை நிற்போம். "கொரோனா" வைரஸ் குறித்த வீண் வதந்திகளைப் பரப்புவது தண்டனைக்குரிய குற்றமாக தமிழக அரசு அறிவித்துள்ளது என்பதையும் கவனத்தில் கொண்டு நச்சுக் கிருமிகளைத் தடுக்கும் நம் தமிழக அரசின் நடவடிக்கைகளுக்கு நமது ஒத்துழைப்பை தருவோம். "கொரோனா" வைரஸை எதிர்த்து வெற்றிக் கொள்வோம் என முற்றம் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,

எஸ். சின்னப்பன்
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத் திட்ட உதவிகள் மற்றும் பணிபுரியும் பெண்களுக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் வாங்க மானியம் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 01.03.2020 அன்று இராமநாதபுரம் ஒருங்கிணைந்த ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற புதிய அரசு மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவில், பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், அறிவியல் மற்றும் தொழில் நுட்பம் மற்றும் புவி அறிவியல் துறை அமைச்சர் டாக்டர் ஹர்ஷ் வர்தன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர் செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜய பாஸ்கர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கொ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 04.03.2020 அன்று கிருஷ்ணகிரியில் புதிய அரசு மருத்துவக் கல்லூரி அடிக்கல் நாட்டு விழாவில், பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர் செல்வம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். எஸ். பிரபாகரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அமைச்சர்

திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள்,

தமிழக சட்டமன்றத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 2020-2021ஆம் நிதியாண்டிற்கான மகளிர் மேம்பாடு குறித்து அறிவித்த அறிவிப்புகள்

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், 16.03.2020 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானிய கோரிக்கையின்போது, தமிழகத்தில் மகளிர் மேம்பாட்டிற்காக புதிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அதன் விபரங்கள்...

● தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 8,000 சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு 15,000 ரூபாய் வீதம் ஆதார நிதியாக 12 கோடி ரூபாய் வழங்கப்படும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் அமைக்கப்படும் புதிய சுய உதவிக் குழுக்களின் பொது நிதியை மேம்படுத்தவும், உள்கடன் வழங்குதலை அதிகப்படுத்தவும், அதிக அளவிலான வங்கிக்கடன் இணைப்பு பெறவும் ஆதார நிதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2020-21 ஆம் நிதி ஆண்டில், 8,000 புதிய சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 15,000 ரூபாய் வீதம் மொத்தம் 12 கோடி ரூபாய் ஆதார நிதியாக வழங்கப்படும்.

● தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 15,000 சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு 50,000 ரூபாய் வீதம் மொத்தம் 75 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், குழு உறுப்பினர்களின் வருமானத்தைப் பெருக்கிடவும் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 202021 ஆம் நிதியாண்டில், 15,000 சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 50,000 ரூபாய் வீதம் மொத்தம் 75 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்.

●தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 'ஊட்டச்சத்து தோட்டம்' அமைப்பதற்கு 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளிடையே ஊட்டச்சத்தினை உறுதி செய்யவும், இரத்த சோகை குறைபாட்டினை சரிசெய்யவும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வீட்டின் பின்புறத்தில் கீரை, முருங்கை, பப்பாளி, கறிவேப்பிலை, கொய்யா மற்றும் சப்போட்டா போன்ற சத்து மிகுந்த பலன் தரும் 'ஊட்டச்சத்து தோட்டம்' அமைக்கப்படவுள்ளது. இதற்காக மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி 2020-21ஆம் நிதியாண்டில் இரண்டு இலட்சம் மகளிர் சுய உதவிக்

"மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் 31 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்."

– மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள்

குழு உறுப்பினர்கள் பயன்பெறும் விதமாக 'ஊட்டச்சத்து தோட்டம்' அமைக்க 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

• தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 6 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 100 இயற்கைப் பண்ணையத் தொகுப்புகள் உருவாக்கப்படும்

இயற்கைப் பண்ணையம் என்பது இயற்கை வழியில் கிடைக்கக்கூடிய உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகளைக் கொண்டு சாகுபடி செய்வதாகும். இயற்கைப் பண்ணைய உணவுப் பொருட்களுக்கு மக்களிடம் வரவேற்பும் சந்தையில் அதிக விலையும் கிடைப்பதால் இயற்கைப் பண்ணையத்தை ஊக்குவிக்க, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கமானது 6 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 10,000 மகளிர் விவசாயிகளை உள்ளடக்கிய 100 இயற்கைப் பண்ணையத் தொகுப்புகள் உருவாக்கப்படும்.

• தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 15,000 சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 10,000 ரூபாய் வீதம் ஆதார நிதியாக மொத்தம் 15 கோடி ரூபாய் வழங்கப்படும்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் நகர்ப்புற ஏழை மக்களைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அத்தகைய குழுக்களின் செயல்பாட்டை வலுப்படுத்தவும், வாழ்வாதார மேம்பாட்டு வாய்ப்புகளுக்கு வங்கிக்கடன் வழங்குவதை அதிகப்படுத்தவும் ஆதார நிதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020-21 ஆம் நிதியாண்டில் 15,000 சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 10,000 ரூபாய் வீதம் மொத்தம் 15 கோடி ரூபாய் ஆதார நிதியாக வழங்கப்படும்.

• 15,000 நகர்ப்புற இளைஞர்களுக்கு 49.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வாயிலாக நகர்ப்புறத்தில் உள்ள வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் பொருட்டு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020-21 ஆம் நிதியாண்டில் 15,000 இளைஞர்களுக்கு 49.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.

• சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவாக 'அம்மா விருதுகள்' வழங்கப்படும்

ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் சிறப்பாக செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புறங்களிலுள்ள பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020-21 ஆம் நிதியாண்டில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவாக மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பரிசுத்தொகையுடன் கூடிய 'அம்மா விருதுகள்' வழங்கப்படும்.

• மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கலாச்சார மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்திட 2.60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் திறமையை வளர்க்கவும் ஒற்றுமையை வெளிப்படுத்தவும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020-21 ஆம் நிதியாண்டில் மாவட்ட, வட்ட மற்றும் நகர்ப்புற அளவில் கலாச்சார மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்க 2.60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

• சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் உறுப்பினர்கள் வெளி மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் பட்டறிவுப் பயணம் செல்வதற்கு 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

மகளிர் சுய உதவிக் குழு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் நகர்ப்புறங்களிலுள்ள பகுதி அளவிலான கூட்டமைப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் தங்களுடைய செயல்பாட்டினை மேலும் மேம்படுத்துவதற்கு ஏதுவாக வெளி மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் சிறப்பாக செயல்படும் குழுக்களைப் பார்வையிடவும் பட்டறிவுப் பயணம் மேற்கொள்ளவும் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020-21 ஆம் நிதியாண்டில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிவித்துள்ளார்கள்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் அரங்கிற்கு விருது

சென்னை, தீவுத் திடலில் 46வது தமிழ்நாடு சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி கடந்த 2019 டிசம்பர் மாதம் 22ஆம் தேதியன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. 09.03.2020 அன்று நடைபெற்ற இப்பொருட்காட்சியின் நிறைவு விழா நிகழ்ச்சியில் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் சிறந்த அரங்குகளுக்கு பரிசு வழங்கி விழாப் பேருரையாற்றினார். மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி ந. நடராஜன் அவர்கள் தலைமையுரையாற்றினார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜய பாஸ்கர் அவர்கள் முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., சுற்றுலா ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திரு. த. பொ. ராஜேஷ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் பொருட்காட்சியில் சிறப்பாக அரங்கு அமைத்ததிற்கான விருதினை மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் மற்றும் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. வெல்லமண்டி ந. நடராஜன் அவர்கள் ஆகியோரிடமிருந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு) திருமதி. சரஸ்வதி கணேசன் அவர்களும், கூடுதல் இயக்குநர் (வாழ்வாதாரம்) திரு. சி. கே. வீரணன் அவர்களும் பெற்றுக் கொண்டனர்.

திருப்பத்தூர் மாவட்டம்

இளைஞர்களுக்கான மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்

திருப்பத்தூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், மாவட்ட வேலைவாய்ப்பு தொழில் நெறி வழிகாட்டு மையம் மற்றும் மாவட்ட நிர்வாகம் ஆகியவை இணைந்து, இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரும் வேலைவாய்ப்பு முகாமினை திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் 22.02.2020 அன்று நடத்தின. சென்னை வேலைவாய்ப்பு மண்டல இணை இயக்குனர் திருமதி. வே. மீனாட்சி அவர்கள் தலைமை தாங்கினார். வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. அ. ரா. சிவராமன் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

இம்முகாமில் 80 தனியார் தொழில் நிறுவனங்களும், 3256 வேலை நாடுநர்களும் கலந்து கொண்டனர், இதில், 1053 நபர்கள் பல்வேறு தனியார் தொழில் நிறுவனங்களில் வேலைக்குத் தேர்வு செய்யப்பட்ட 1053 நபர்களுக்கு பணி ஆணைகளை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. கே. சி. வீரமணி அவர்களும், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் டாக்டர் நிலோபர் கபீல் அவர்களும் மற்றும் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. ப. சிவன் அருள், இ.ஆ.ப. அவர்களும் இணைந்து வழங்கினார். மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறிவழிகாட்டு மையத்தின் உதவி இயக்குநர் திருமதி. கா. பரமேஸ்வரி நன்றி கூறினார்.

இம்முகாமில் தூய நெஞ்சக் கல்லூரியின் முதல்வர் திரு. அந்தோணி, மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், பணியாளர்கள், களப் பணியாளர்கள் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தினர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்குப் பெருங்கடன்

ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் சர்வதேச மகளிர் தின விழா மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி ஆகியவை 14.03.2020 அன்று, ஈரோடு, வ.உ.சி. பூங்கா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியினை மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. செங்கோட்டையன் அவர்களும், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. கே. சி. கருப்பணன் அவர்களும் இணைந்து துவக்கி வைத்து, மகளிர் தின விழாவை முன்னிட்டு மாவட்ட அளவில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும், ஊராட்சி அளவிலான மகளிர் சுய உதவிக் குழு கூட்டமைப்புகளுக்கு பெருங்கடன், சமுதாய முதலீட்டு நிதி மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நேரடி வங்கிக் கடன் ஆகியவற்றையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. கதிரவன், இ.ஆ.ப., சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே. எஸ். தென்னரசு, திரு. வே. பொ. சிவசுப்பிரமணி, திரு. இ. எம். ஆர். ராஜா (எ) கே. ஆர். ராஜா கிருஷ்ணன், ஈரோடு மாவட்ட மகளிர் திட்டத்தின் திட்ட இயக்குநர் (பொ) டாக்டர். மு. பாலகணேஷ், உதவித் திட்ட அலுவலர்கள் திரு. கு. சம்பத்குமார், திருமதி. இரா. சாந்தா, திரு. க. அன்பழகன், திருமதி. தா. செல்லம், திரு. கா. பாஸ்கர், திரு. ஜோசப் சலேத் ஆரோக்கியராஜ் மற்றும் பிற அரசு துறை அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் மகளிர் உயிர்ம வேளாண் சந்தை

இயற்கை வேளாண் பொருட்களுக்கான தேவையைப் பூர்த்தி செய்தல் மற்றும் அப்பொருட்களை உற்பத்தி செய்வோருக்கு நியாயமான விலை கிடைக்கச் செய்திடும் நோக்கில் தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் சார்பில் சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் மாதந்தோறும் முதல் சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் மகளிர் உயிர்ம வேளாண் சந்தை என்ற பெயரில் வேளாண் மகளிரின் விளை பொருட்களுக்கான விற்பனை கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் 07.03.2020 முதல் 09.03.2020 வரை மகளிர் உயிர்ம வேளாண் சந்தை சென்னை, நுங்கம்பாக்கம் வள்ளுவர் கோட்டம் அருகிலுள்ள அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்றது. இவ்விற்பனைக் கண்காட்சியில் சுய உதவிக் குழு மகளிர் இயற்கை முறையில் விளைவித்த வேளாண் பொருட்களான கீரை வகைகள், காய்கறிகள், பழங்கள், அரிசி வகைகள், செடிகள், விதைகள், மரசெக்கு எண்ணெய், சிறு தானியங்கள், மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் மற்றும் நெகிழிக்கு மாற்றுப் பொருட்களான காகிதப் பைகள், துணிப் பைகள், பாக்கு மட்டைப் பொருட்கள் மற்றும் பனை ஓலைப் பொருட்கள் உள்ளிட்ட ஏராளமான இயற்கைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள், கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த இயற்கை வேளாண் பொருட்களைப் பார்வையிட்டு, கடை வைத்திருந்த சுய உதவிக் குழு மகளிருக்கு பல்வேறு ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்கினார்.

கிருஷ்ணகிரி மாவட்டம்

இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்குதல்

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு அரசு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மற்றும் ஊத்தங்கரை அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி ஆகியவை இணைந்து, தனியார் நிறுவனங்களில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தரும் வேலைவாய்ப்பு முகாம் ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி. மனோரஞ்சிதம் நாகராஜ் அவர்கள் முன்னிலையில் 08.02.2020 அன்று நடைபெற்றது. 2188 இளைஞர்களும், 55 தனியார் தொழில் நிறுவனங்களும், 5 தொழிற் பயிற்சி நிறுவனங்களும் கலந்து கொண்ட இந்த முகாமில் 654 இளைஞர்கள் பல்வேறு நிறுவனங்களில் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டனர். மேலும் 72 இளைஞர்கள் தொழிற்பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

தனியார் நிறுவனங்களில் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி ஆணைகளையும், நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்ட 132 இளைஞர்களுக்கு நேர்முகத் தேர்வு அழைப்பாணைகளையும் கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. எஸ். உமா மகேஸ்வரி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு. கௌரி சங்கர் மற்றும் மற்றும் ஊத்தங்கரை அரசினர் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் திருமதி. ஹெப்சிபா ஏஞ்சிலா ஆகியோர் வழங்கினர். இவ்வேலைவாய்ப்பு முகாமில் மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள் திரு. எம். பெருமாள், திரு. வி. பிரபாகரன் மற்றும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வட்டார மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

வேலூர் மாவட்டம்

இளைஞர் தொழில் திறன் மேம்பாட்டு பயிற்சி மையம் தொடக்க விழா

வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மாவட்ட மக்கள் கற்றல் மையம் (மகமை) சார்பில் வறுமைக் கோட்டுக்கு கீழே உள்ள இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி அளிப்பதற்கான மையத்தினை வேலூர் மாவட்டப் பஞ்சாயத்து அலுவலக வளாகத்தில் 26.02.2020 அன்று வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. அ. சண்முகசுந்தரம், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. அ. ரா. சிவராமன் அவர்கள், உதவித் திட்ட அலுவலர் (நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்) திரு. ஜெயகாந்தன், உதவி திட்ட அலுவலர்கள் (ஊரக வாழ்வாதார இயக்கம்) திரு. திருமேனி, திரு. வெங்கடேசன் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இராமநாதபுரம் மாவட்டம்

மகளிர் தின விழா

இராமநாதபுரம் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் சர்வதேச மகளிர் தின விழா இராமநாதபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்களின் தலைமையில் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பல்வேறு கலைநிகழ்ச்சிகளுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கொ. வீரராகவராவ், இ.ஆ.ப., அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு கலைநிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட சுய உதவிக் குழுவினருக்கு பரிசுகளை வழங்கி விழா பேருரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் உதவித் திட்ட அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தருமபுரி மாவட்டம்

மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்

தருமபுரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி மையம் ஆகியவை இணைந்து, தனியார் துறையில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தரும் வேலைவாய்ப்பு முகாமினை நடத்தின.

தருமபுரி அரசு கலைக்கல்லூரியில் நடைபெற்ற இந்த வேலைவாய்ப்பு முகாமில், வேலை வாய்ப்பு வேண்டி 14 மாற்றுத் திறனாளிகள் உட்பட 1453 நபர்களும், பணி வாய்ப்பு வழங்க பல்வேறு தனியார் தொழில் நிறுவனங்களும் பங்கேற்றனர். இம்முகாமில் பணி வாய்ப்பு பெற்ற 419 நபர்களுக்கு தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கி விழாப் பேருரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திருமதி. ஆர்த்தி, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் (பொ) திருமதி. மகேஷ்வரி, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. சீனிவாச சேகர், வட்டாட்சியர் திரு. சரவணன், இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் திரு. முரளிதரன், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் திரு. கணேசன், திரு. ராஜீவ்காந்தி, திரு. ஜோப் காமராஜ், திரு. சிவக்குமார், திரு. பெரியநாயகம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

சேலம் மாவட்டம்

நகர்ப்புற வாழ்வாதார மையம் மற்றும் வாராந்திர சந்தை துவக்க விழா

சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின் கீழ் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகர்ப்புறங்களில் உள்ள ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கத்தில் பல்வேறு செயல்பாடுகளை நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மேற்கொண்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக சேலம் மாவட்டம், புதிய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள பூமாலை வணிக வளாகத்தில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் நகர்ப்புற வாழ்வாதார மையம் (City Livelihood Centre)மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்பு பொருட்களை விற்பனை செய்யும் வாராந்திர சந்தை ஆகியவற்றினை சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. அ. ராமன், இ.ஆ.ப., அவர்கள் 14.02.2020 அன்று துவக்கி வைத்து, அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பொருட்களைப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் சேலம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சா. செல்வகுமார், உதவித் திட்ட அலுவலர் திரு. கே. முருகேசன், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின் மேலாளர் திரு. சித்ரஞ்சன்தாஸ் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டம்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் மாசித் திருவிழாவை முன்னிட்டு, தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் சார்பாக மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிப்புப் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி 05.03.2020 முதல் 14.03.2020 வரை நடைபெற்றது. இக்கண்காட்சியினை தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து சிறப்பித்தார். நிகழ்ச்சியில் திருச்செந்தூர் கோவில் செயல் அலுவலர் திரு. அம்ரீத், இ.ஆ.ப., திருச்செந்தூர் கோட்ட வருவாய் அலுவலர் திருமதி. தனபிரியா, தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி, மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சுவையும் சத்தும் நிறைந்த

இனிப்பு கம்பு அடை

உடலுக்கும் வலுவும், ஆரோக்கியமும் தருபவை சிறு தானியங்கள். சிறு தானியங்களில் செய்த உணவுப் பொருட்களை சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள். சிறு தானியமான கம்பில் செய்த இனிப்பு கம்பு அடையை செய்வது எப்படி என்று பார்ப்போமா...

தேவையான பொருட்கள்:

கம்பு மாவு - 1 கப், வெல்லம் -1/2 அல்லது 3/4 கப், தேங்காய் துண்டுகள் - 1/3 கப், ஏலக்காய்-2, உப்பு - சிறிதளவு, நல்லெண்ணெய் அல்லது நெய் - 2 டீஸ்பூன்

செய்முறை :

முதலில் ஏலக்காயை உடைத்து உள்ளே இருக்கும் விதைகளை பொடி செய்து கொள்ள வேண்டும். வெல்லத்தை சிறிதளவு தண்ணீரில் கரைத்துக் கொள்ள வேண்டும். அந்த தண்ணீருடன் கம்பு மாவு, பொடித்த ஏலக்காய், சிறிதளவு உப்பு, தேங்காய் துண்டுகள் ஆகியவற்றை கலந்து சப்பாத்தி மாவு பதத்திற்கு பிசைந்துக் கொள்ள வேண்டும்.

பிசைந்த மாவு கலவையை ஒரு மணி நேரம் ஈரத்துணியால் மூடி வைக்க வேண்டும். பின்பு சிறு சிறு உருண்டைகளாக உருட்டிக் கொள்ள வேண்டும். இந்த உருண்டையை உள்ளங்கை அல்லது எண்ணெய் தடவிய ப்ளாஸ்டிக் கவரின் மேல் வைத்து மெல்லியதாக தட்டிக் கொள்ள வேண்டும். தட்டியதை தவாவில் போட்டு நெய் அல்லது நல்லெண்ணெய் விட்டு மிதமான தீயில் வேக வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு பக்கம் வெந்ததும் அடைகளை மெதுவாக திருப்பி போட்டு மேலும் சிறிது நேரம் வேக வைத்து எடுக்க வேண்டும். இப்பொழுது சுவையான இனிப்பு கம்பு அடை தயார்.

கம்பின் மருத்துவ பயன்கள் :

கம்பு தாய்மார்களுக்கு பால் உற்பத்தியைப் பெருக்கும். உடல் வலிமையை அதிகமாக்கும். அரிசியை விட பல மடங்கு சத்து மிகுந்த உணவான கம்பில் புரதம், சுண்ணாம்பு, பாஸ்பரஸ் போன்ற தாதுக்களும் உயிர்ச் சத்துக்களும் உள்ளன. ஜீரண சக்தியை அதிகரிக்கும். உடல் வெப்ப நிலையை சமநிலையில் வைத்திருக்க உதவும். வேண்டாத கொழுப்புகளை கரைத்து பருமனைக் குறைக்கும்.

மருத்துவ குணங்கள் நிறைந்த

அத்திப்பழம்

உணவாகவும், மருந்தாகவும் பயன்படும் பழங்களில் அத்திப்பழமும் ஒன்று. அத்தி எளிதில் ஜீரணமாவதுடன் கல்லீரல், மண்ணீரல் போன்ற ஜீரண உறுப்புகளை நல்ல முறையில் சுறுசுறுப்புடன் செயலாற்றச் செய்கிறது. ஆகையால் ஈரல், குலைக்கட்டி கண்ட குழந்தைகளும் இக்கனிகளை கொடுக்கலாம்.

சிறுநீரகத்தில் கல்லடைப்பு போன்ற தடங்கல்களை அகற்றிச் சிறுநீரைப் பெருக்குகிறது. பெருங்குடலில் ஆங்காங்கே, இறுகிய கழிவுப் பொருட்களை பக்குவப்படுத்தி, இளக்கி, வியர்வையாகவும், சிறுநீராகவும், மலமாகவும் வெளியேற்றி குடலை மிருதுவாகச் செய்கிறது.

தினசரி 2 பழங்களை சாப்பிட்டால் உடலில் இரத்த உற்பத்தி அதிகரிக்கும். உடலும் வளர்ச்சி அடைந்து பருமனடையும். மலச்சிக்கலை நீக்க உணவிற்குப் பிறகு சிறிதளவு அத்தி விதைகளைச் சாப்பிடலாம். நாள்பட்ட மலச்சிக்கலை குணமாக்க 5 பழங்களை இரவில் சாப்பிட வேண்டும்.

அத்திப்பழத்தில், முழு அளவு ஊட்டச்சத்து இருக்கிறது. இதில் புரோட்டீன், சர்க்கரை சத்து, கால்ஷியம், பாஸ்பரஸ் மற்றும் இரும்புச் சத்து அதிக அளவில் இருப்பதாகவும், மற்ற பழங்களைவிட அத்திப்பழத்தில் இந்த சத்துக்கள் நாலு மடங்கு அதிகமாக இருப்பதாகவும் ஆய்வுகள கூறுகின்றன. இதைத் தவிர வைட்டமின் ஏ, வைட்டமின் சி அதிக அளவில் உண்டு.

சீமை அத்திப்பழம் வெண்குஷ்டத்தை குணமாக்குகிறது. அரை கிராம் காட்டு அத்திப்பழத்தை தினசரி ஒரு வேளை சாப்பிட்டு வந்தால், வெண்புள்ளிகள், வெண் குஷ்டம், தோலின் நிறமாற்றம் ஆகியவை குணமாகும். அதைப் பவுடராக்கி பன்னீரில் கலந்து ,வெண் புள்ளிகள் மீது பூசலாம்.

மதுரை மாவட்டம்

வங்கி மற்றும் வங்கிக் கிளைகளுக்கு விருது வழங்கும் விழா

மதுரை மாவட்டத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு வழங்குவதில் சிறப்பாக செயல்பட்ட வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளுக்கான விருதுகள் வழங்கும் விழா 25.02.2020 அன்று மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் டி. ஜி. வினய், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் முன்னிலையில் நடைபெற்ற மாவட்ட அளவிலான வங்கியாளர்கள் கூட்டத்தின் போது நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட அளவில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அதிக கடன் இணைப்பு வழங்கிய வங்கிகள் மற்றும் வங்கிக் கிளைகளுக்கு விருதுகள் மற்றும் காசோலைகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் இயக்குநர் / மதுரை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. எம். பிரபாகர் அவர்கள், மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் திரு. எம். எஸ். பாண்டியன் அவர்கள், இந்தியன் வங்கியின் உதவி பொது மேலாளர் மற்றும் பல்வேறு வங்கிகளின் அலுவலர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்டம்

மகளிர் தின விழா கலைநிகழ்ச்சிகள்

தூத்துக்குடி மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் சர்வதேச மகளிர் தின விழாவினை முன்னிட்டு 07.03.2020 அன்று அலுவலகப் பணியாளர்கள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு விளையாட்டு போட்டிகளும், 08.03.2020 அன்று அறிஞர் அண்ணா மாநகராட்சி திருமண மண்டபத்தில் கலை நிகழ்ச்சிகளும், விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு வழங்கும் விழாவும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. அருண் கோபாலன், இ.கா.ப., தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் திரு. ஜெயசீலன், இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் / மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பி. விஷ்ணு சந்திரன், இ.ஆ.ப., சார் ஆட்சியர், திருச்செந்தூர் கோவில் செயல் அலுவலர் திரு. அம்ரித் இ.ஆ.ப., மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. தனபதி ஆகியோர் தங்களின் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முன்னதாக மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து தூத்துக்குடி மாவட்ட இசைப்பள்ளியின் மாணவ மாணவிகள், கிராமிய கலைக் குழுக்கள் மற்றும் கண்பார்வையற்ற பாடகர் திரு. விக்டோரியா என்பவரின் பாடல் நிகழ்ச்சி போன்றவை நடைபெற்றன. இந்நிகழ்ச்சிகளில் அனைத்து துறை உயர் அலுவலர்கள், மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்டம்

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாரச் சந்தை

திருவண்ணாமலை நகரில் உள்ள ஈசான்ய மைதானத்தில் விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், சாலையோர வியாபாரிகள் மற்றும் உற்பத்தியாளர்கள் ஆகியோர் நேரடியாக பயன் பெறும் வகையிலான வாரச்சந்தையினை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப., அவர்கள் 07.03.2020 அன்று துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பெ. சந்திரா, உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 03.00 மணி முதல் இரவு 09.00 மணிவரை நடைபெறும் இந்த சந்தையில் இயற்கை முறையில் உற்பத்தி செய்யும் காய்கறிகள், பழங்கள், உணவுப் பண்டங்கள், தானிய வகைகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் விற்பனை செய்யப்படும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் முதன்மை செயல் அலுவலர் (திறன் வளர்ப்பு) அவர்கள் நாவலூர் திட்டப் பகுதியில் வசிக்கும் குடியிருப்புவாசிகளுடன் நேரடி கலந்துரையாடல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஆகியவற்றின் சார்பாக காஞ்சிபுரம் மாவட்டம், நாவலூர் திட்டப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் ஆகிய வற்றின் பயன்களை அவர்களுக்கு அடையச் செய்வதே மிக முக்கிய நோக்கமாகும்.

அதன்படி, 13.02.2020 அன்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் முதன்மை செயல் அலுவலர் (திறன் வளர்ப்பு) திருமதி. ஜி. சரஸ்வதி கணேசன் அவர்கள் நாவலூர் திட்டப்பகுதியில் நேரடி கள ஆய்வு செய்து, திட்டப் பகுதியில் வசிக்கும் குடியிருப்புவாசிகளுடன் நேரடி கலந்துரையாடல் மேற்கொண்டு, நாவலூர் திட்டப் பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள், தேவைப்படும் உடனடி வசதிகள் மற்றும் குறைகளை மக்களிடம் நேரடியாகக் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையத்தின் (TNVRC) முதன்மை செயல் அலுவலர் திருமதி. தீபா ராஜ்கமல் அவர்கள் சுய உதவிக் குழுக்கள், கூட்டமைப்புகள் ஆகியவற்றின் நோக்கம் மற்றும் அவசியம், மறுகுடியமர்த்தப்பட்ட குடியிருப்பு அளவிலான கூட்டமைப்பினை உருவாக்குதல், கூட்டமைப்பின் மூலம் செயல்படுத்தக் கூடிய செயல்பாடுகள் மற்றும் வழிமுறைகள் குறித்து தெளிவாக விளக்கிக் கூறினார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. சொ. ஸ்ரீனிவாசன் அவர்கள், சுய உதவிக் குழுக்கள் / தனிநபர்கள் சுய தொழில் தொடங்குவதற்கான வழிமுறைகள், தொழில் தொடங்குவதற்குத் தேவையான நிதி பெறும் வழிமுறைகள் போன்றவை குறித்து எடுத்துக் கூறி, ஏற்கனவே சுய உதவிக் குழுக்கள் மூலமாக நிதியுதவி பெற்று தொழில் புரிவோர் மற்றும் தனிநபராக ஏற்கனவே தொழில் புரிவோர்களுக்குத் தேவையான நிதி சார்ந்த / நிதி சாராத தொடர்பான ஆலோசனைகளை வழங்கினார். இக்கலந்தாய்விற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) செய்திருந்தது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

‘மனம் இனிது திட்டம்’ குறித்த பயிற்சி

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் வட்டாரத்தைச் சார்ந்த வட்டார இயக்க மேலாளர், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் சமுதாய வளப் பயிற்றுநர்களுக்கு ‘மனம் இனிது திட்டம் – Mental Health Programme’ தொடர்பான உண்டு உறைவிட பயிற்சி 10.02.2020 முதல் 14.02.2020 வரை பச்சைமலை, டாப்செங்காட்டுப்பட்டி, வனத்துறை சுற்றுலா மையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியினை, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. நா. சரவணன் அவர்களின் முன்னிலையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் (கூடுகை மற்றும் கூட்டாண்மை) திரு. சி. கே. வீரணன் அவர்கள் தலைமை தாங்கி துவக்கி வைத்தார்.

மேற்படி பயிற்சியில் பயிற்சியின் நோக்கம், திட்ட அறிமுகம், மன நலம் மற்றும் மனநோய் பற்றி புரிந்து கொள்ளுதல், மன நோய்க்கான விழிப்புணர்வு, மனநலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான சட்டபூர்வமான பிரச்சனை கள் மற்றும் மனநல சட்டம், மனநல காப்பகத்தை பார்வையிடும் முறை மற்றும் குழந்தைகளை தவறாக பயன்படுத்துவதை தவிர்க்கும் முறை ஆகியன குறித்து SCARF நிறுவனத்தின் பயிற்றுநர் திரு. கோடீஸ்வர ராவ் பயிற்சி அளித்தார். இந்நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. ஆர். பி. குணசேகரன், ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. பானுமதி, உதவித் திட்ட அலுவலர் திரு. வி. சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விருதுநகர் மாவட்டம்

மாவட்ட அளவிலான வங்கியாளர்களுக்கான பயிற்சி பட்டறை

விருதுநகர் மாவட்ட தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்குவதில் உள்ள இடர்பாடுகள் மற்றும் குறைகளை களைவதற்கும், சுய உதவிக் குழுக்கள் வங்கி வட்டி மானியம் பெறுவதில் (Interest Subvention) உள்ள தடைகளை அகற்றுவதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் கடன் பெறும் இலக்கை அடைவதற்கும் தேவையான விபரங்களைப் பகிர்ந்து கொள்ளும் வகையில் வங்கிகளுக்கான ஒரு நாள் புத்தாக்க பயிற்சி மற்றும் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன் வழங்கும் நிகழ்ச்சி விருதுநகர் பேருந்து நிலையம் அருகில் உள்ள ஹோட்டல் ஆர்ய நிவாஸில் 12.02.2020 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. இரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக 50 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 2 கோடிக்கான கடன் உதவிகளை வழங்கி, விருதுநகர் மாவட்டத்தில் கந்து வட்டி முறையை அதிகளவில் குறைத்ததிற்கு மிகவும் உறுதுணையாக இருந்த வங்கிகளுக்கு பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார்.

முன்னதாக விருதுநகர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. இரா. தேவேந்திரன் அவர்கள் நிகழ்ச்சிக்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று பேசினார். இந்நிகழ்ச்சியில் விருதுநகர் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. விஸ்வநாதன், உதவித் திட்ட அலுவலர் திருமதி. செ. மு. வசுமதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம்

ஊட்டச் சத்து தோட்டம் அமைத்தல் மற்றும் கண்காணித்தல் குறித்து பயிற்றுனருக்கான பயிற்சி

கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் ஊட்டச்சத்து தோட்டம் அமைத்தல் மற்றும் கண்காணித்தல் குறித்து பயிற்றுனருக்கான பயிற்சி கிருஷ்ணகிரி வட்டார இயக்க மேலாண்மை அலகு அலுவலகத்தில் 18.02.2020 மற்றும் 19.02.2020 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெற்றது. கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. உமா மகேஷ்வரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சியில், உதவித் திட்ட அலுவலர்கள், ஊத்தங்கரை, கெலமங்கலம் மற்றும் தளி ஆகிய ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் பிரதிநிதிகள், சமுதாய வல்லுநர்கள், முதன்மைப் பயிற்றுநர்கள்

(வேளாண் மற்றும் கால்நடை), வட்டார மேலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியில் உணவு மற்றும் ஊட்டச் சத்து, ரத்த சோகை, சரிவிகித உணவு, பழங்கள் மற்றும் காய்கறிகளின் முக்கியத்துவம், வீட்டுக் காய்கறி தோட்டம் மற்றும் மாடித் தோட்டம், பயிர் பாதுகாப்பு, இயற்கை வழி பயிர் பாதுகாப்பு கரைசல்கள், மண்புழு மற்றும் மட்கு உரம் தயாரிப்பு, வீட்டுத் தோட்டத்திற்கான சொட்டு நீர் பாசன அமைப்பு போன்றவை குறித்து, தோட்டக்கலைத் துறையைச் சார்ந்த அலுவலர் களான திரு. மூர்த்தி, திருமதி. கயல்விழி, மற்றும் கே.வி.கே. பயிற்றுநர்கள் திருமதி. பூமதி, திரு. ரமேஷ்பாபு ஆகியோர் பயிற்சி வழங்கினர். பயிற்சியின் நிறைவில் கிருஷ்ணகிரி ஒன்றியம், பெத்ததாளப்பள்ளி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் மூலம் அமைக்கப்பட்டுள்ள மாடித் தோட்டம் பார்வையிடப்பட்டது.

நீலகிரி மாவட்டம்

இளைஞர்களுக்கு பணி நியமன ஆணை வழங்குதல்

நீலகிரி மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில், நீலகிரி மாவட்டத்தில் உள்ள படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்றுத் தரும் வட்டார அளவிலான வேலை வாய்ப்பு முகாம் 22.02.2020 அன்று கோத்தகிரியில் உள்ள புயல் நிவாரண மைய கட்டிடத்தில் நடைபெற்றது. இந்த முகாமில் 610 இளைஞர்கள் கலந்து கொண்டு தனியார் நிறுவனங்களில் பணி வேண்டி விண்ணப்பித்தனர். 21 தனியார் நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேர்காணல் நடத்தி, தங்களின் நிறுவனங்களுக்குத் தேவையான இளைஞர்களைத் தேர்வு செய்தனர். அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட 230 இளைஞர்களுக்கு ஆணை வழங்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்டம்

சுய உதவிக் குழு மகளிர் அமைத்துள்ள மாடித் தோட்டம்

புதுக்கோட்டை மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் இயங்கி வரும் ரெயின்போ மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் அனைவருக்கும் சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் மாடியில் தோட்டம் அமைத்திட பயிற்சி வழங்கப்பட்டது. இப்பயிற்சியினைத் தொடர்ந்து மாடித்தோட்டம் அமைக்கும் திட்டத்தின் கீழ் ரூ.1,50,000/– செலவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படும் பூமாலை வணிக வளாக கட்டட மாடியில் ரெயின்போ மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களால் மாடித் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மாடித் தோட்டத்தினை புதுக்கோட்டை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திருமதி. அ. லலிதா அவர்கள் பார்வையிட்டு பல்வேறு ஆலோசனைகளை வழங் கினார். உடன் உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் ரெயின்போ மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் உள்ளனர்.

கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்ட மக்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டம்

தமிழக அரசு 'கொத்தடிமை தொழிலாளர் விடுவிப்பு, மீட்பு, மற்றும் மறுவாழ்வு குறித்த மாநில செயல் திட்டத்தை' உருவாக்கி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் அத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

அதன்படி கொத்தடிமை தொழில் முறையை ஒழித்தல், விடுவிக்கப்பட்ட மக்களுக்கு உரிய மறுவாழ்வளித்தல், அரசின் நலத் திட்டங்களில் அம்மக்களை பயன் பெறச் செய்தல், விடுவிக்கப்பட்ட நபர்களுக்கான சிறப்பு சுய உதவிக் குழுக்களை அமைத்தல், நூறு நாள் வேலைத் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2018ம் ஆண்டு முதல் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் 'விடுவிக்கப்பட்ட கொத்தடிமை மக்களுக்கென ஒரு சிறப்பு மறுவாழ்வு திட்டம்' உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், விடுவிக்கப்பட்ட கொத்தடிமை நபர்களே ஒருங்கிணைப்பாளர்களாக செயல்படுதல், பெண்கள் மற்றும் ஆண்களை உள்ளடக்கிய சிறப்பு சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், வீதி நாடகங்கள் மூலமாக விளிம்பு நிலையிலுள்ள மக்களுக்கு கொத்தடிமை முறை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களை சுய உதவிக் குழுக்களில் இணைத்தல், குழுக்களில் இணைந்த மக்களின் குடும்பப் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டைக் குறித்த விரிவான தகவல் சேகரித்தல், சுழல் நிதி, வறுமை ஒழிப்பு நிதி, ஒத்த தொழில் குழு உருவாக்குதல், அவர்களுக்கு அடிப்படை கல்வி வழங்குதல், நிதி மேலாண்மை, சிறு தொழில் குழுக்களை உருவாக்க களப்பயணம், திறன் வளர்ப்பு மற்றும் ஆட்டு வங்கி போன்ற ஒத்த தொழில் குழுக்களை உருவாக்குதல் போன்றவை இத்திட்டத்தின் சிறப்பம்சங்களாகும்.

தற்போது வேலூர், விழுப்புரம், திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் ஆகிய 5 மாவட்டங்களில் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வையும் வாழ்வாதாரத்தையும் இத்திட்டம் அமைத்துக் கொடுத்து வருகிறது. மேலும் விளிம்பு நிலையிலிருக்கும் மக்களைக் கண்டறிந்து அவர்களையும் காத்து வருகிறது.

'விடுவிக்கப்பட்ட கொத்தடிமை மக்களுக்கென ஒரு சிறப்பு மறுவாழ்வு திட்டத்தை' தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்துடன் இணைந்து செயல்படுத்தி வரும் இண்டர்நேஷனல் ஜஸ்டிஸ் மிஷன் (IJM) என்ற அமைப்பின் சார்பில் சென்னையில் கொண்டாடப்பட்ட சர்வதேச மகளிர் தின விழா நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு) திருமதி. க. சரஸ்வதி கணேசன் அவர்கள் கலந்து கொண்டு, விடுவிக்கப்பட்ட கொத்தடிமை மக்களின் மறுவாழ்விற்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் குறித்து உரையாற்றினார்.

கடலூர் மாவட்டம்

மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்

கடலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் கடலூர் மாவட்ட வேலை வாய்ப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் ஆகியவை இணைந்து நடத்திய மாபெரும் வேலை வாய்ப்பு முகாம், கடலூர், தேவனாம் பட்டினம் பெரியார் அரசு கலைக் கல்லூரியில் 28.02.2020 அன்று நடைபெற்றது. கடலூர் மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திருமதி. பூ. காஞ்சனா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு மண்டல இயக்குநர் (வேலைவாய்ப்பு) திரு. சந்திரன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

இந்த வேலைவாய்ப்பு முகாமில், கடலூர், விழுப்புரம் மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களிலிருந்து 3,105 வேலை நாடுநர்கள் கலந்து கொண்டனர். இம்முகாமில் 81 தனியார் நிறுவனங்களை சேர்ந்த வேலையளிப்போர் கலந்து கொண்டு நேர்காணல் நடத்தி தங்களுக்கு தேவையான பணியாளர்களை தேர்வு செய்தன. அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட 828 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் திரு. விஜயகுமார், திரு. இராஜ்குமார், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திரு. எகசானலி மற்றும் பெரியார் அரசு கலைக் கல்லூரியின் துறை தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

சர்வதேச மகளிர் தின விழா

சர்வதேச மகளிர் தின விழாவினை முன்னிட்டு, சென்னை, நுங்கம்பாக்கம் அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் ஆகியவற்றின் சார்பாக 07.03.2020 அன்று மகளிர் தின விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் / தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் தலைமைச் செயல் அலுவலர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள் சர்வதேச மகளிர் தின விழா கொண்டாட்டத்தினை துவக்கும் விதமாக கேக் வெட்டி, சர்வதேச மகளிர் தின வாழ்த்துகளை தெரிவித்து விழா தலைமையுரை ஆற்றினார்.

கொண்டாட்டம்

(திறன் வளர்ப்பு) திருமதி. சரஸ்வதி கணேசன் அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் திருமதி. எஸ். பாரிஜாதம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் (வாழ்வாதாரம்) திரு. சி. கே. வீரணன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

இவ்விழாவில், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயலாக்க அலுவலர்/ கூடுதல் இயக்குநர் திரு. ஜா. சம்பத் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து, காஞ்சிபுரம், சென்னை மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழு மகளிர் சர்வதேச மகளிர் தினம் குறித்த கவிதைகளை வாசித்து, பெண்களின் சிறப்பு குறித்து பேசினர். தமிழ்நாடு மகளிர் மேம் பாட்டு நிறுவனம் மற்றும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்,ஆகியவற்றின் அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்ட பட்டிமன்றம், பாட்டுப் போட்டி, நடனப் போட்டி, குழு நடனம், நாடகம், கவிதைப் போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டி கள் நடைபெற்றன. சர்வதேச மகளிர் தின விழாவினை முன்னிட்டு நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் / தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் தலைமைச் செயல் அலுவலர் திருமதி. ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்

என் தாய்..!

அரிதுயிர் திரியாக்கி,
அனுதினமும் அனலில் மெழுகாகி,
மடிதனை ஊஞ்சலாக்கி,
மாண்பில் நீ மதியாகி,
இன்னுயிரை துச்சமாக்கி,
ஈடில்லா ஒளியாகி,
அகவை ஐம்பதை நான் தொட்டாலும்
அணு அணுவாய் என்னுள் பரவி,
என்னை உயர்வாக்கி
இன்னுயிர் ஈன்றதேனோ...?

க. சரஸ்வதி கணேசன்
கூடுதல் இயக்குநர்
(திறன் வளர்ப்பு)
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

உணவு வியாபாரம் செய்யும் தெருவோர வியாபாரிகளுக்கு உணவு பாதுகாப்புத் துறை மூலம் வழங்கப்பட்ட சான்றிதழ் பயிற்சி

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் உணவுப் பாதுகாப்புத் துறை ஆகியவை இணைந்து, உணவு தயாரித்து விற்பனை செய்யும் தெருவோர வியாபாரிகள் மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு பாதுகாப்பாக உணவு தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல் குறித்த பயிற்சியினை வழங்கின. இப்பற்சியில் மொத்தம் 23 மகளிர் வியாபாரிகள் கலந்து கொண்டனர்.

நகர்ப்புறத்தில் செயல்படும் தெருவோர உணவு கடைகளை சுத்தமான முறையிலும், சுகாதாரமான முறையிலும் இருப்பதை உறுதி செய்வதே இப்பயிற்சியின் நோக்கமாகும். இப்பயிற்சியின் மூலம் தெருவோர உணவு விடுதிகளில் சுத்தம் மற்றும் சுகாதாரம் மேம்பட வாய்ப்புகள் அதிகரித்துள்ளது.

பயிற்சி பெற்று தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வின்போது தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் திருமதி. எஸ். பாரிஜாதம் மற்றும் சென்னை உதவி திட்ட அலுவலர் மற்றும் சமுதாய ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் இலக்கு மற்றும் சாதனை ஆய்வுக் கூட்டம்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலமாக சென்னை மாவட்ட மேலாண்மை அலகு மற்றும் ICICI வங்கியுடன் இணைந்து 2019–2020–ஆம் ஆண்டிற்கான இலக்கு மற்றும் சாதனை ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் இவ்வாண்டிற்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் குழு கடன், சுய உதவிக் குழு வங்கி கடன், ஒத்த தன்னார்வ குழு அமைத்தல், வங்கி கடன் இணைப்புத் தொடர்பான ஆய்வு மேற்கொண்டு அதனடிப்படையில் இந்த ஆண்டிற்கு இலக்கை அடைவதற்கான முன் திட்டம் உருவாக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குனர்கள் திருமதி எஸ். பாரிஜாதம், திருமதி. பெ. விஜயலட்சுமி, சென்னை மாவட்ட திட்ட இயக்குநர் திரு, தியாகராஜன், ICICI வங்கி அலுவலர் திரு. எஸ்வர் மார்க்ஸ், திரு. கிருஷ்ணன் (ஆலோசகர்), மாநில வல்லுநர் திரு, மூர்த்தி மற்றும் உதவி திட்ட அலுவலர், சமுதாய ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு பெருங்கடன்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் சென்னை மத்தியப் பகுதியில் (மண்டலம் 6 முதல் 10 வரை) இயங்குகின்ற பகுதி அளவிலான கூட்டமைப்புகளை ஒருங்கிணைத்து, நகர அளவிலான கூட்டமைப்பாக உருவாக்கி, அதற்கான நிர்வாகிகளைத் தேர்வு செய்து சங்கங்களின் பதிவுச் சட்டம் 1975ன்படி பதிவு செய்யப்பட்டு வங்கிக் கணக்கும் ஆரம்பித்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இந்த நகர அளவிலான கூட்டமைப்பின் சார்பில் இந்தியன் வங்கியில் இருந்து பெருங்கடனாக ரூ. 50 இலட்சம் பெற்று, அத்தொகையை கூட்டமைப்பில் உறுப்பினர்களாக இணைந்து செயல்பட்டு வரும் பகுதி அளவிலான கூட்டமைப்பில் சிறப்பாக செயல்படும் பகுதி அளவிலான கூட்டமைப்பின் 90 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது.

2020 மார்ச் 8 அன்று சென்னை மாநகராட்சி ரிப்பன் மாளிகையில் நடைபெற்ற மகளிர் தின விழா கொண்டாட்டத்தின் போது பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கான பெருங்கடனிற்காக காசோலையினை சென்னை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல துணை ஆணையர் (தெற்கு) திரு. ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் திரு, தியாகராஜன், உதவிக் திட்ட அலுவலர் திருமதி. அமுதா, மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சர்வதேச மகளிர் தின விழாக் கொண்டாட்டம்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்ப்புற அளவிலான கூட்டமைப்பு ஆகியவை இணைந்து சென்னை சோழிங்கநல்லூரில் உள்ள முகமது சதக் கல்லூரியில் 08.03.2020 அன்று சர்வதேச மகளிர் தின விழாவினை கொண்டாடினர். இவ்விழாவினை சென்னை பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல துணை ஆணையர் (தெற்கு) திரு. ஆல்பி ஜான் வர்க்கீஸ், இ.ஆ.ப., அவர்களும், தென் சென்னை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெ. ஜெயவர்தன் அவர்களும் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தனர்.

இவ்விழாவில் சிறப்பாக செயல்பட்டு வரும் பகுதி அளவிலான கூட்டமைப்பிற்கு பாராட்டுக் கேடயம் வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் இயங்கும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் நகர்ப்புற அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர்களாக உள்ள 500க்கும் மேற்பட்ட மகளிரைக் கொண்டு சர்வதேச மகளிர் தினத்தின் குறிக்கோளான பாலினச் சமநிலை சின்னத்தை (Logo) உருவாக்கியதுடன், கையெழுத்து இயக்கம் மூலம் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட்டது. மேலும் தென் சென்னை பகுதியில் உள்ள சுய உதவிக் குழுக்கள் மூலம் பல்வேறு சுய தொழில் மேற்கொண்டுள்ள பெண்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டன. பெண்களின் உடல் நலத்தை மேம்படுத்தும் வகையில் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு கண்காட்சியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ்விழாவில் மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர். சமுதாய அமைப்பாளர்கள், பகுதி அளவிலான கூட்டமைப்பு, நகர்ப்புற அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

- சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
- முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட உங்களின் ஆதரவை தாருங்கள்!
- முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

21-ம் ஆண்டில் வெற்றிநடை போடும்

முற்றம்

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு	ரூ. 180
இரண்டு ஆண்டு	ரூ. 360
மூன்று ஆண்டு	ரூ. 540

விளம்பரக் கட்டணம்

அட்டையின் 2-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் 3-வது பக்கம்	ரூ. 50,000
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும். பரிசும் வழங்கப்படும்.

விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:
மேலாளர், முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம், 3வது மாடி,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

முற்றக் கச்சேரி 2.0

அன்புள்ள முற்றம் வாசகர்களே...

சுய உதவிக் குழுவின் ஊக்குனர் மற்றும் உறுப்பினர்களிடையே நடைபெறும் உரையாடல்கள் மற்றும் கேள்வி பதில்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விபரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் முற்றக் கச்சேரி வெளியிடப்படுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

இடம் : சுய உதவிக் குழு ஊக்குநர் மதியின் வீடு

கதை மாந்தர்கள் : ஊக்குநர் மதி, உறுப்பினர்கள் தனம், கோமதி மற்றும் கோகிலா

சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களான தனம், பாலா மற்றும் மீனா ஆகியோர் சுய உதவிக் குழுவின் ஊக்குனர் மதி வீட்டிற்கு வருகின்றனர். மதி அவர்களை வரவேற்கிறார்.

மதி: வாங்க... வாங்க...உட்காருங்க...

தனம்: என்னக்கா... நல்லாயிருக்கீங்களா?

மதி: நல்லா இருக்கேன். நீங்க சௌக்கியமா இருக்கீங்களா? என்ன விசயமா வந்திருக்கீங்க?

பாலா: நாங்க நல்லா இருக்கோம் அக்கா. பகுதி அளவிலான கூட்டமைப்பு பத்தி விளக்கமாக சொல்றேன்னு அன்னைக்கு குழுக் கூட்டத்துல சொன்னீங்களே அக்கா, அதப்பத்து தெரிஞ்சுக்கத்தான் அக்கா வந்திருக்கோம்.

மதி: ரொம்ப சந்தோசம். பகுதி அளவிலான கூட்டமைப்பு என்பது நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படுது.

மீனா: அப்படியா? பகுதி அளவிலான கூட்டமைப்பை எந்தப் பகுதியில அமைப்பாங்க?

மதி: நகர்ப்புற பகுதிகளில் செயல்படும் பல்வேறு சமுதாயம் சார்ந்த சுய உதவிக் குழுக்கள் ஒன்றிணைந்து செயல்பட ஏற்படுத்தப்பட அமைப்புதான் பகுதி அளவிலான கூட்டமைப்பு ஆகும்.

பாலா: அப்படியா? எதற்காக இந்தக் கூட்டமைப்பு தொடங்கப்படுது?

மதி: மகளிர், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள் மற்றும் நலிவுற்ற மக்கள் சுய உதவி குழுக்களக அமைத்து குழுக்களை வலுப்படுத்தி நிதி இணைப்பு வழங்கி நகர்ப்புற ஏழை மக்களை பொருளாதார சுய சார்பு பெற்று, நீடித்த நிலைத்த தன்மையை அடைந்திடத்தான் பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுது.

தனம்: அட அப்படியா... பகுதி அளவிலான கூட்டமைப்போடு சிறப்பியல்புகள் என்னன்னு சொல்லுங்க மதி அக்கா?

மதி: பகுதி அளவிலான கூட்டமைப்பு சட்ட அங்கீகாரம் பெற்ற அமைப்பு மட்டுமல்ல ஜனநாயக அமைப்புமாகும். இந்த அமைப்புல ஏழைகளுக்கும் பொறுப்பு வகிக்கலாம். தனிநபர் நிர்வாக பொறுப்பு வகிக்க வரையறை இருக்கு, அதுமட்டுமில்லாம சுழற்சி முறையில தலைமை மாற்றம், கூட்டுத் தலைமை மற்றும் பொறுப்பு, அதிகாரம் வாய்ந்த சமூகத் தணிக்கை குழு என்பது மட்டுமில்லாம முழு சுதந்திரம் பெற்ற அமைப்பாகவும் இந்த பகுதி அளவிலான கூட்டமைப்புகள் இருக்கும்.

பாலா: மதி அக்கா, இந்த கூட்டமைப்புகளுக்கு நிதி ஆதாரங்கள் என்ன?

மதி: உறுப்பினர் நுழைவுக் கட்டணம், உறுப்பினர் சந்தா, சேவைக் கட்டணம், அபராதம், பங்கு மூலதனம், நன்கொடை, வங்கிக் கடன்/பெருங்கடன், அரசின் நிதி உதவிகள், பணி ஒப்பந்தங்கள் மற்றும் தொழில்கள் மூலம் வரும் வருமானம் போன்றவை பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கான நிதி ஆதாரங்கள் ஆகும்.

பாலா: சரிக்கா... இந்த வருமானத்தையெல்லாம் முறையா பதிவு செய்வாங்களா?

மதி: என்ன பாலா இப்படி கேட்கற... கூட்டமைப்புக்கு வரும் வரவுகளும், கூட்டமைப்பு செய்யும் செலவுகளும் முறையா பதிவேடுகளில் பதிவு செய்வாங்க. ஆண்டுதோறும் தணிக்கையும் செய்வாங்க. இதபத்தி போனமுறை பேசினோமே. கூட்டமைப்போடு வரவு–செலவு, குழுக்களின்

எண்ணிக்கை, குழு கடன் திருப்பம் போன்ற விபரங்கள் சரியாக இருந்தால்தான் அதை வைத்து கூட்டமைப்பு ஆண்டுக் கடன் திட்டம் தயாரிக்க முடியும்.

மங்கை: ஆண்டுக் கடன் திட்டமா? அப்படின்னா என்னக்கா?

மதி: கூட்டமைப்பின் ஆண்டுக் கடன் திட்டம் என்பது, உறுப்பினர்கள் அனைவரின் ஓராண்டிற் கான நிதி / கடன் தேவைகளைக் கண்டறிந்து, அதனைப் பூர்த்தி செய்யக்கூடிய நிதி ஆதாரங்கள் மற்றும் அதனைப் பெறுவதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்திட செயல்படுத்திட உருவாக்கப்படும் திட்டமே 'ஆண்டுக் கடன் திட்டம்' எனப்படும். இதனை கொண்டுதான் கூட்டமைப்பின் நிதி நிலை அறிக்கையை தயார் செய்வாங்க.

கீதா: நிதி நிலை அறிக்கையா? அது என்ன அறிக்கை?

மதி: கூட்டமைப்பின் ஆண்டு செயல் திட்டங்களுக்கு ஏற்ப தேவையான நிதியினைக் கணக்கிட்டு, அதற்குண்டான ஆதாரங்களைப் பட்டியலிட்டு, செயல்பாடுகளுக்குத் தகுந்தவாறு தோராய வரவு – செலவுகளை வரையறுப்பது 'நிதி நிலை அறிக்கை (பட்ஜெட்)' ஆகும்.

பாலா: அதுசரி... கூட்டமைப்போட வரவு செலவு தணிக்கைன்னா என்ன?

மதி: என்ன இப்படி கேக்கற... ஓர் அமைப்போ/ நிறுவனமோ ஒரு குறிப்பிட்ட காலத்தில் பராமரிக் கப்பட்ட கணக்குப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களைக் கொண்டு நடைபெற்ற வரவு மற்றும் செலவு நடவடிக்கைகளைத் தகுதி வாய்ந்த பட்டயக் கணக்காளரைக் கொண்டு ஆய்வு செய்து, அறிக்கை மற்றும் சான்று பெறும் வழிமுறையே 'தணிக்கை' ஆகும். இது உள் தணிக்கை மற்றும் வெளித் தணிக்கை என இரண்டு வகையா செய்யப்படும்.

கீதா: சரி மதி அக்கா... எனக்கு ஒரு சந்தேகம், பகுதி அளவிலான கூட்டமைப்புக்கென கடமைகளும் பொறுப்புகளும் இருக்கா? அதப் பத்தி கொஞ்சம் சொல்லுங்க.

மதி: பகுதி அளவிலான கூட்டமைப்புக்கு என கடமைகளும் பொறுப்புகளும் நிறைய இருக்கு. கூட்டமைப்போட நிர்வாகிகளான தலைவர், செயலாளர், இணை செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், நிதி உள்ளாக்க வங்கி சேவை இணைப்பு தன்னார்வலர், புத்தகப் பராமரிப்பாளர் மற்றும் வாழ்வாதாரத் துணைக்குழு, சமூகப் பாதுகாப்பு துணைக்குழு, சமூகத் தணிக்கை குழு போன்ற அனைவருக்கும் கடமைகளும் பொறுப்பு களும் இருக்கு.

ஏழை எளிய மக்கள் தங்களது அவசர தேவைகளுக்கும் மற்றும் சிறு தொழில் தொடங்குவதற்கும், அரசு அங்கீகாரம் பெற்ற நிதி நிறுவனங்களிடமிருந்து சில நிபந்தனைகளுக்குட்பட்டு வாங்கும் சிறிய அளவிலான கடன் 'நுண் நிதி கடன்' எனப்படும்.

மங்கை: மதி அக்கா... நுண்நிதி கடன் அப்படின்னா என்ன?

மதி: ஏழை எளிய மக்கள் தங்களது அவசர தேவைகளுக்கும் மற்றும் சிறு தொழில் தொடங்கு வதற்கும், அரசு அங்கீகாரம் பெற்ற நிதி நிறுவனங் களிடமிருந்து சில நிபந்தனைகளுக்குட்பட்டு வாங்கும் சிறிய அளவிலான கடன் 'நுண் நிதி கடன்' எனப்படும்.

கீதா: அப்படியா... பகுதி அளவிலான கூட்டமைப்புகளும் நுண் நிதி நிறுவனமாக செயல்படுதா? அதனால அதன் உறுப்பினர்களுக்கு என்ன பயன்?

மதி: ஓ... கூட்டமைப்புகளும் நுண் நிதி நிறுவனமாக செயல்படலாம், நம்ம பக்கத்து வார்டில் உள்ள பகுதி அளவிலான கூட்டமைப்பு ஆதார நிதியாக பெற்ற ரூபாய் 50,000/– தனது குழு உறுப்பினர்களுக்கு சிறு கடன் வழங்கியதன் மூலம் தற்போது ரூபாய் 17,000/– சுழற்சி மூலம் மூலதன நிதியாக குழுக்களுக்கு கடன் வழங்கியுள்ளார்கள்.

மங்கை: அக்கா நம்ம குழுவை எப்படி கூட்டமைப்போடு இணைக்கிறது?

கீதா: நமது குழு கூட்டத்தில் கூட்டமைப்போடு இணைய சம்மதித்து தீர்மானம் எடுத்து அதை கூட்டமைப்பு பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டு தெரிவிக்க வேண்டும்.

மங்கை: நீங்க சொன்னா சரிதான் மதி அக்கா. நம்ம குழுவோட வரவு செலவ நீங்க பார்த்தீங்களா? சரியா இருக்கா?

மதி: நான் பார்த்துட்டேன். நீங்களும் ஒருமுறை பார்த்திடுங்க. அடுத்த வாரம் நம்ம குழுக் கூட்டத்துல வைச்சு மறுபடியும் ஒருமுறை சரிபார்த்துடலாம்.

பாலா: சரிக்கா... கணக்கு புத்தகத்தைக் கொடுங்க, நாங்க பார்க்கிறோம்.

பாலா, கீதா மற்றும் மங்கை குழுவின் வரவு செலவு புத்தகங்களை சிறிது நேரம் பார்வையிட்டு விட்டு பிறகு மதியிடம் திருப்பித் தருகின்றனர்.

மதி: கணக்கெல்லாம் சரியா இருக்கா?

பாலா, கீதா மற்றும் மங்கை: ரொம்ப சரியா இருக்கு அக்கா. சரி நாங்க போயிட்டு வரட்டுமா?

மதி: சரி போயிட்டு வாங்க... குழுக் கூட்டத்துல சந்திப்போம்.

பாலா, கீதா மற்றும் மங்கை ஆகியோர் மதியிடம் விடைபெற்று, தங்களின் வீடுகளுக்குச் செல்கின்றனர்.

(முற்றக் கச்சேரி தொடரும்)

வளம் தந்த நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

சேலம் மாவட்டம், கொண்டலாம்பட்டி மண்டலம், வார்டு எண் 50, 6/261, சங்ககிரி மெயின் ரோடு, நெத்திமேடு, சேலம்2 என்ற முகவரியில் வசித்து வரும் இன்பவள்ளி (க/பெ. செல்வம்), வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த இவர், தான் வசிக்கும் பகுதியில் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழி காட்டுதலில் செயல்பட்டு வரும் சங்கமம் மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இணைந்து செயல்பட்டு வந்தார். இந்தக் குழுவின் உறுப்பினர்கள், அன்னதானப்பட்டி சிண்டிகேட் வங்கிக் கிளையில் சேமிப்புக் கணக்கு தொடங்கி தவறாது சேமித்து வருவதாலும், பெற்ற குழு கடன் தொகையினை தவணை தவறாது திரும்ப செலுத்தி வருவதாலும், இந்தக் குழுவின் உறுப்பினர்களுக்கு சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEP-ஐ)க் கீழ் தனி நபர் கடன் கோரினர். அதன்படி சங்கமம் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினரான இன்பவள்ளிக்கு பெட்டிக்கடை மற்றும் தேனீர் கடை வைப்பதற்கு தனி நபர் கடனாக ரூபாய் ஒரு லட்சம் வழங்கப்பட்டது.

தான் பெற்றக் கடன் தொகையை மூலதனமாகக் கொண்டு, பெட்டிக் கடை மற்றும் தேனீர் கடை வைத்துள்ள இன்பவள்ளி தற்போது தினமும் கணிசமான வருவாய் பெற்று வருவதுடன், வங்கிக் கடனையும் தவணை தவறாமல் செலுத்தி வருகிறார். தனது குடும்பத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்த தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திற்கும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கும் மற்றும் தான் உறுப்பினராக உள்ள சங்கமம் மகளிர் சுய உதவிக் குழுவிற்கும், கடன் உதவி வழங்கிய வங்கிக்கும் இன்பவள்ளி தனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறார்.

வளமான வாழ்விற்கு வழிகாட்டிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

விருதுநகர் நகராட்சியில் உள்ள பாத்திமா நகர் பகுதியில் வசித்து வரும் கவிதா, மிகவும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரும் இவரின் கணவரும் கூலி வேலைக்குச் சென்று அதில் கிடைக்கும் குறைவான கூலியில் தங்களின் மூன்று குழந்தைகளுடன் வறுமையில் வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் அமைக்கப்பட்ட சக்தி மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக இணைந்த சுமதி, வீட்டிலேயே சிறிய அளவில் மெழுகுவர்த்திகள் தயாரித்து அருகில் உள்ள கடைகளில் விற்பனை செய்து குறைந்த அளவில் வருவாய் ஈட்டி வந்தார்.

இந்நிலையில், பொருளாதாரத்தில் பின்தங்கிய மகளிருக்கு அரசு வழங்கும் நலத்திட்டங்களைப் பற்றி சுய உதவிக் குழு மூலம் அறிந்த கவிதா, தான் செய்து வரும் மெழுகுவர்த்தி தயாரிப்புத் தொழிலை விரிவுபடுத்திடத் தேவையான முதலீடு வேண்டி, விருதுநகர் மாவட்ட தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் சக்தி சுய உதவிக் குழுவின் உதவியுடன் யூனியன் பாங்க் ஆப் இந்தியா வங்கியில் SEP–ஐ கடன் வேண்டி விண்ணப்பித்தார். கவிதாவின் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவருக்கு ரூ. 50,000/- கடன் வழங்கப்பட்டது. அத்தொகையினை மூலதனமாகக் கொண்டு, மெழுகுவர்த்தி செய்வதற்குத் தேவையான பல்வேறு அளவுகளிலான அச்சுகள் மற்றும் மூலப்பொருட்களை வாங்கி மெழுகுவர்த்தி தயாரிக்கும் தொழிலை விரிவுபடுத்தியுள்ளார்.

தற்போது கவிதா, அதிக அளவில் பல்வேறு வகையான மெழுகுவர்த்திகளைத் தயாரித்து விற்பனை செய்து வருகிறார். இவர் தயாரிக்கும் மெழுகுவர்த்திகளை இவரின் கணவர் பேருந்தின் மூலம் சிவகாசி, சாத்தூர் மற்றும் அருப்புக்கோட்டை ஆகிய நகரங்களுக்கு எடுத்துச் சென்று மொத்தமாக கடைகளுக்கு விற்பனை செய்கிறார். தற்போது கவிதாவின் குடும்பம் வறுமையின் பிடியில் இருந்து விடுபட்டுள்ளது. தன்னுடைய குடும்பத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் உதவியாக இருந்து, வளமான வாழ்விற்கு வழிகாட்டிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார் கவிதா.

பயனுள்ள குறிப்புகள்

மசால் வடை செய்யும்போது அரைத்த மாவில் அரை மணி நேரம் ஊறிய ஒரு பிடி ஜவ்வரிசியையும் ஒரு பிடி பயத்தம் பருப்பையும் பிழிந்து போட்டுக் கலந்து வடை தட்டுங்கள். மொறு மொறுப்பாகவும், சுவையாகவும் இருக்கும்.

பிரெட் ஸ்லைஸ் மீதியாகி விட்டால் அதை சிறு சிறு துண்டுகளாக வெட்டி வெயிலில் காய வைத்து மிக்ஸியில் போட்டு பவுடர் செய்து வைத்துக் கொண்டு அதை கறி வறுவல் செய்யும்போது பயன்படுத்துங்கள். மிகவும் சுவையாக இருக்கும்.



கமலா ஆரஞ்சு பழத் தோல்களை எறிந்து விடாமல் பத்திரப்படுத்தி வையுங்கள். தேநீர் தயாரிக்கும் போது அந்தத் தோலை துளியூண்டு கிள்ளி, தேயிலையுடன் சேர்த்து டிகாஷன் தயாரித்தால் மணம் தூக்கலாக இருக்கும்.

துவரம்பருப்பு துவையல் தயாரிக்கும்போது சிறிது கொள்ளையும் வறுத்துச் சேர்த்து அரைத்தால் மணமாகவும், சுவையாகவும் இருக்கும். விருப்பப்பட்டால் பூண்டும் சேர்த்து அரைக்கலாம். உடம்பிற்கு நல்லது.

வாங்கி வைத்த பால் பாக்கெட்டை ஃபிரிட்ஜில் வைக்க முடியவில்லை. கரண்ட் கட். அவசரத்துக்கு காய்ச்சவும் நேரமில்லை. அப்பொழுது பதட்டப்படாமல் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் நிரப்பி அதில் பால் பாக்கெட்டை போட்டு வைத்தால் போதும். நான்கு மணி நேரம் கழித்துக்கூட காய்ச்சிக் கொள்ளலாம்.

வெந்நீர் கொதிக்க விடும் பாத்திரத்தில் இரண்டு கொத்து வேப்பிலையை போட்டு வைத்திருந்து வேப்பிலையை எடுத்துவிட்டு வெந்நீரில் தலை குளிக்கலாம். இதனால் சரும பாதிப்புகள் சரியாகும்.

தரையில் எண்ணெய் கொட்டிவிட்டால் அதன்மீது கோலப்பொடியை தூவிவிட்டு துடைத்தால் எண்ணெய் பசை நீங்கிவிடும்.

மிக்ஸர், ஓமப்பொடி, ஓலை பக்கோடா போன்றவற்றை செய்ய மிஷினில் மாவு அரைக்க கொடுக்கும்போது முக்கால் கிலோ கடலைப்பருப்புக்கு கால் கிலோ பட்டாணி பருப்பையும் சேர்த்து அரைத்து கார வகை பலகாரங்கள் செய்தால் சுவை கூடுதலாக இருக்கும்.

அலுமினிய குக்கரில் சமைக்கும் போது அடியில் கால் மூடி எலுமிச்சம் சாறு போட்டால் குக்கர், கறுப்படையாமல் 'பளிச்' என்று இருக்கும்.

மார்ச் 8

தன் பசியை மறந்து
நம் பசியைப் போக்குவாள்...!
பிரச்சனைகள் அனைத்திற்கும்
தீர்வு காண்பாள்...! – ஆனால்
அவளுக்கு ஓர் பிரச்சனை என்றால்
ஆதரவுக் கரம் நீட்ட யாரும் இல்லை...
இன்னல்கள் அத்தனையும் கடந்து
சாதனைகள் படைத்து வரும்
அனைத்து இறைவிகளுக்கும்
இந்த ஓர் நாள் சமர்ப்பணம்...!!

– செல்வி. ஹேமலதா ரவிச்சந்திரன்,
இ.ஆர். நகர், கூடுவாஞ்சேரி

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் செயல்பாடுகள்

உலக வங்கி குழுவினருடன் கலந்துரையாடல்

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மாநில அளவிலான அலுவலர்களுடன் உலக வங்கி குழுவினர் 24.02.2020 முதல் 27.02.2020 வரை நான்கு நாட்கள் மாநில அலுவலகத்தில் திட்டப் பணிகள் முன்னேற்றம் குறித்து கலந்தாய்வு மேற் கொண்டனர். இக்கலந்தாய்வின் போது திட்டத்தின் மறுசீரமைப்பு குறித்தும் பல்வேறு துறைகள் மற்றும் தனியார் பங்களிப்பு என்ற முறையில் புதுமை சார்ந்த முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்திடக் கண்டறியப்பட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் ஆலோசனையும் நடத்தப்பட்டது. இந்த ஆலோ சனையில் பலதரப்பட்ட புதுமை சார்ந்த முன்னோடித் திட்டங்களைச் செயல்படுத்திட சங்கல்ப், தநாசான்ஃபெட், ஐசிஐசிஐ வங்கி, நிதி மற்றும் மேலாண்மை ஆய்வு நிறுவனம், வத்சல்யா அறக்கட்டளை (co-creating centre- Sankalp Intellcap Green Enterprises- TNSANFED, - Research Studies-IFMR, MGP & Business Correspondent - ICICI, Low cost incinerator - Vatsalya Foundation) ஆகிய நிறுவனங்களுடன் கலந் துரையாடல் நடத்தப்பட்டது.

இவற்றின் மூலம் கிராமப்புறங்களில், புதுமை சார்ந்த முன்னோடித் திட்டங்களை செயல்படுத்தி சுய உதவிக் குழு குடும்பங்கள் மற்றும் பெண்கள் தொழில் மேம்பாடு அடைவதற்கான வழிவகைகள் திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் திட்ட சீரமைப்பிற்கான ஆலோசனையின் போது அனைத்துக் கூறுகள் மற்றும் அதன் வெளிப்பாடுகள் பற்றி விவாதிக்கப்பட்டு, திட்டத்தின் காலவரையறையின்படி சாத்தியக்கூறு உள்ள செயல் பாடுகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்...

கிராமத்தை நோக்கி வீசிய தென்றலாய்....
ஊரகத் தொழில் முனைவுகளே நோக்கமாய்..
செயல்படும் திட்டம் நம் ஊரகப் புத்தாக்கத் திட்டம்...

அழகு பெண்ணே! அருமை இளைஞனே!
உழவு கொண்டு உணவு கொடுக்கும் உற்பத்தியாளரே...
குடும்பப் பெண்ணே குழுவில் உள்ள கண்ணே...
தொழில் பெருக்கும் திட்டம் நம் ஊரகப் புத்தாக்கத் திட்டம்...

கிராம மண் சிறக்க, தொழில் வளம் செழிக்க
தொழில் குழு அமைக்க குழுவாய் குழுமிடு
திட்டத்தில் பங்கெடு!-உன்னோடு
உன் கிராம வளர்ச்சியை முன்னெடு!
உறுதுணை செய்யும் திட்டம் நம் ஊரகப் புத்தாக்கத் திட்டம்...

நாட்டின் வளமே! எதிர்கால இளைஞனே-உங்கள்
திறன் பயிற்சி கொண்டு சிங்கநடைபோட்டு
கிராம பெயர் சொல்லி பாடிட மக்களுடன்
கைகோர்க்கும் திட்டம் நம் ஊரகப் புத்தாக்கத் திட்டம்...

கிராம வளம் கொழிக்க,தொழில் வளம் பெருக்க..,
கிராம மக்கள்ஒன்று கூடி முதலீட்டுத் திட்டம் தயாரிக்க
துணை நிற்கும் திட்டம் நம் ஊரகப் புத்தாக்கத் திட்டம்...

– விஜயலட்சுமி,
செயல் அலுவலர்
செயல் அலுவலர் (கணக்கு (ம) நிர்வாகம்)
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்,
திருப்பூர் மாவட்டம்.

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி திட்டத்திற்கான பயிற்சி

மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி திட்டம் என்பது (PGP) இத்திட்டத்தின் ஊரகப் பகுதிகளில் தொழில் நிறுவனங்கள் மற்றும் புதிய தொழில் முனைவுக்கான வாய்ப்புகளைக் கண்டறிந்திடவும், கிராம அளவிலான முதலீட்டுத் திட்டங்களைத் தயார் செய்யவும் மக்கள் பங்கேற்புடன் கூடிய குழு விவாதம் நடத்தி, கள அளவிலான கணக்கெடுப்பு நடத்தப்படுவதாகும். தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் இச்செயல்பாட்டினை கைபேசி செயலி மூலம் செய்து முடித்திட திட்டமிட்டு **'வளம்'** என்ற கைப்பேசி செயலி உருவாக்கப்பட்டு, அதற்கான ஒருமுகப் பயிற்சியும் 02.03.2020 அன்று மதுரை, வேலூர், கடலூர்,

ஈரோடு மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நடைபெற்றது. இச்செயலியில் வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, தோட்டக் கலை, மீன் வளம், சிறு தொழில்கள், பாரம்பரிய கைத்தொழில்கள், சுற்றுலா போன்ற துறைகளில் உள்ள ஊரக வள விவரங்கள் பதிவேற்றம் செய்யப்படு கின்றன. மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி திட்டம் தயாரிப்பு அணியினர் ஒவ்வொரு ஊராட்சியிலும் 12 நாட்கள் முகாமிட்டு கிராம நடைப்பயணம், தொழில் ஆய்வுக் கணக்கெடுப்பு, இலக்கு நோக்கிய குழு விவாதங்கள் (உற்பத்தியாளர்கள், தொழில் முனைவோர், சமுதாயம் சார்ந்த அமைப்பு மற்றும் இளைஞர்களுடன்) ஆகியவற்றின் மூலம் ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் கிராம முதலீட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து வட்டார, மாவட்ட முதலீட்டுத் திட்டங்கள் மற்றும் மாநில முதலீட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்படும்.

கொரோனாவைத் தோற்கடிப்போம்..!

2020-ன் உயிர்க் கொல்லி கலவரம்
உலகை அச்சுறுத்தும் கிருமி பயங்கரம்-இதைத்
தடுத்து அழிக்க உலகம் தீவிரம்-எனவே
கொரோனா கிருமி அழியும் நிச்சயம்.

சீனாவில் தோன்றி, ஐரோப்பா வழியாய்
அமெரிக்கா சென்று, ஈரானைத் தொட்டு
இந்தியாவைப் பார்க்கும் இந்தக் கிருமியை
இங்கே பரவாமல் தடுப்பது நம் இலட்சியம்.

தன் சுத்தம் பேணுவோம் அனைவரும்
சுகாதாரவழிகளைக் கடைப்பிடிப்போம்;
தும்மல் வந்தாலும், இருமலென்றாலும்
இம்மியும் பிறரைப் பாதிக்காது செய்வோம்.

காய்ச்சல் வந்தால் மருத்துவரைப் பார்ப்போம்;
நோய் எதிர்ப்புச் சக்தியினை நமது உடலில் வளர்ப்போம்;
கூட்டம் கூடுகையில் கலப்பதைத் தவிர்ப்போம்;
கூடிய வரையினில் தனிமையில் இருப்போம்.

கீரைகள், காய்கனி அதிகம் உண்போம்;
தேவையென்றால் வேம்பு நீரும் குடிப்போம்;
உடல், மன ஆற்றலை நாளும் வளர்ப்போம்;
இயல்பாக நமது பணியினைத் தொடர்வோம்.

தூரப் பயணங்கள் சில நாட்கள் தவிர்ப்போம்.
சுற்றுலா, யாத்திரை பின்னாளில் தொடர்வோம்.
அரசின் அறிவுரையை கவனமுடன் கேட்போம்.
முறையாய்ப் பின்பற்றி மகிழ்வுடன் வாழ்வோம்.

சிக்குன் குனியாவை எளிதில் விரட்டினோம்.
டெங்குக் காய்ச்சலை எதிர்த்துத் துரத்தினோம்.
கொரோனாவையும் அடித்து வீழ்த்துவோம்.
ஆரோக்யமாக என்றும் நாம் வாழுவோம்.

ஜா. சம்பத்
கூடுதல் இயக்குநர் /
முதன்மைச் செயலாக்க அலுவலர்
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் கீழ் திருநங்கைகளுக்கு வாழ்வாதார மேம்பாட்டு ஆலோசனை கூட்டம்

தூத்துக்குடி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆலோசனைப்படி திருநங்கைகளுக்கான வாழ்வாதார மேம்பாட்டு ஆலோசனைக் கூட்டம், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்ட அலுவலகத்தில் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மூலம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 59 திருநங்கைகள் கலந்து கொண்டனர். தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் / இணை இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்கள் தலைமையேற்று சிறப்புரையாற்றினார். உதவித் திட்ட அலுவலர் திருமதி. பிரேமா மற்றும் தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் மாவட்ட செயல் அலுவலர் திரு. ரா. வேல்முருகன் ஆகியோர் திருநங்கைகளுக்கு திட்ட விளக்கவுரை வழங்கினார்கள்.

“வாழ்வினில் பல இன்னல்கள் உள்ளது. எனவே வீட்டில் இருந்து வெளியேறினாலும் தனக்கென ஒரு வீட்டை உருவாக்கும் அளவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வீடு கட்டுவதற்கு வீட்டுமனைப் பட்டாவினை திருநங்கைகளுக்கு வழங்கியுள்ளார். எனவே நாங்களும் சகமனிதர்கள்தான் என இன்று தங்களுக்கான நீடித்த நிலைத்த வருமானம் தரக் கூடிய வாழைநார் தயாரித்தல், பாக்குமட்டை தட்டு தயாரித்தல், கறவை மாடு வளர்ப்பு, சாம்பல் செங்கல் மற்றும் பெட்டிக்கடை தொழில்கள் வேண்டும் என வந்திருக்கும் திருநங்கைகளுக்கு ஊரகப் புத்தாக்கத் திட்டம் மூலம் வருங்காலங்களில் பயிற்சி பெற்று தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த மாவட்ட ஆட்சித் தலைவரின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கமும், தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டமும் இணைந்து அவர்கள் வாழ்வாதாரத்திற்காக தொழில் ஏற்பாடுகளுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்” என கூட்டத்தில் கூறப்பட்டது.

வலிமையான வளர்ச்சித் திட்டம் தீட்டிடுவோம்!

மக்கள் பங்கேற்புடனே-கிராம வளர்ச்சிக்கு
மகத்தான திட்டம் தீட்டிடுவோம்...!
கிராம நடை பயணத்தில்
கிராம வளங்கள் கண்டறிவோம்...!!
இளைஞர்களின் திறன் வளர்க்க
இலக்கு நோக்கிய
குழு கலந்துரையாடல் செய்திடுவோம்...!
உற்பத்தியாளர்களுடன் கலந்து பேசி
உரிய தொழில்களை கண்டறிவோம்...!!
மாவட்ட பகுப்பாய்வு அறிக்கையும்
மதிப்பு கூட்டு தொடர் ஆய்வு நடத்தியும்
‘வளம்’ எனும் இணையத்தில்
வலிமையான வளர்ச்சித் திட்டம் தீட்டிடுவோம்...!
மாற்றுத் திறனாளிகளுக்கும்,
மகளிர் தலைமையிலான குடும்பத்திற்கும்
ஊரகப் புத்தாக்கத் திட்டத்தினாலே
உரிய தொழில் வாய்ப்பை உருவாக்கிடுவோம்...!!

– ச. ரமேஷ்
செயல் அலுவலர் (வணிகத் திட்டம் (ம) நிதி)
தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம்,
சிவகங்கை மாவட்டம்.

வலைதளத்தை வாய்ப்பாக மாற்றிய தன்னம்பிக்கை தாரகை

தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் சார்பில் சிவகங்கை மாவட்டம், காளையார் கோயில் ஒன்றியத்தில் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயார் செய்ய கிராம நடைபயணம் செல்லும் போது 'ஊனம் உடலில்தான் மனதில் இல்லை' என்பதை தனது தன்னம்பிக்கைக்கும், உழைப்புக்கும் இல்லை என நிரூபித்து விட்டார் 38 வயதான மாற்றுத் திறனாளி பெண்மணி புவனேஸ்வரி.

காளையார்கோவில் ஒன்றியம், பள்ளித்தம்பம் ஊராட்சியில் காந்திமதி, க/பெ. காளைராஜ் (லேட்), என்பவரின் மூன்றாவது மகளாகப் பிறந்தவர் புவனேஸ்வரி. அண்ணன், அக்காள், தம்பி, தங்கை ஆகியோரைக் கொண்ட கூட்டுக் குடும்பத்தில் பிறந்த இவர், பிறவியிலேயே 80 சதவிகித மாற்றுத்திறனாளி ஆவார். 8ஆம் வகுப்பு வரை கல்வி கற்ற இவர் குடும்ப வறுமையின் காரணமாகவும், உடல் ஊனம் காரணத்தினாலும் மேற்படிப்பை தொடர வில்லை.

உடன்பிறந்த அனைவரும் திருமணமாகி வெளியூர் சென்றுவிட, தன் வயதான தாயுடன் தனியாக வசித்து வருகிறார். வறுமையின் பிடியில் சிக்கித் தவித்த இவரும், இவரது தாயாரும் செய்வதறியாது தவித்த நிலையில், தன்னம்பிக்கை தளராத புவனேஸ்வரி அக்கம் பக்கத்தினர் உதவியுடன் செல்போனில் யூடூப் (YouTube) வலைதளத்தின் மூலமாக வயர்கூடை பின்னும் கலையை வீட்டில் இருந்தபடியே தானே கற்று தேர்ந்து, வீடுகளில் அன்றாடம் பயன்படுத்தப்படும் பலவண்ண வயர் கூடைகள், பள்ளிக் குழந்தைகளுக்கான உணவு கொண்டு செல்லும் கூடைகள் போன்றவற்றை வீட்டில் இருந்தபடியே தயார் செய்து, தனது கிராமம் மட்டுமல்லாது காளையார் கோவில் சுற்று வட்டாரத்தில் உள்ள பிற கிராம மக்களுக்கும் விற்பனை செய்து வருமானம் ஈட்டுகிறார்.

ஒரு வயர் கூடை பின்னிட இவர் எடுத்துக் கொள்ளும் காலம் இரண்டு நாட்கள். தயாரிப்பு செலவு போக ஒரு கூடைக்கு இவருக்கு 220 ரூபாய் கிடைக்கிறது. மாதம் ஒன்றுக்கு இவர் சராசரியாக 15 கூடைகள் தயார் செய்து, குறைந்தபட்சம் சுமார் ரூபாய் 3300/– வரை வருமானம் ஈட்டுகிறார். மாற்றுத் திறனாளி களுக்கான அரசு உதவித் தொகை மாதம் 1000/ – ரூபாயும் கிடைக்கிறது. திருவிழா காலங்களில் மாதம் ரூ 5000/– வரை வருமானம் ஈட்டுகிறார்.

இவர் மல்லிகை முற்றம் என்கிற மகளிர் சுய உதவிக் குழுவிற்கும் ஊக்குனராகவும் திறம்பட செயல்படுகிறார். இந்த குழு உறுப்பினர்கள் இவருக்கு அருகில் உள்ள நகரப் பகுதிகளுக்குச் சென்று மூலப் பொருட்கள் வாங்கி வருவது போன்ற பல உதவிகளையும் செய்து வருகின்றனர். வளர்ந்து வரும் தொழில் முனைவோராக உள்ள இவர், தனது சுய உதவிக் குழுவில் உள்ள மற்ற பெண்களுக்கும் தற்போது கூடை பின்னக் கற்றுக் கொடுக்க முடிவு செய்திருக்கிறார்.

'தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு.' – என்னும் திரு வள்ளுவரின் வாக்கிற்கிணங்க வாழ்ந்து வரும் புவனேஸ்வரி, தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டம் மூலம் பள்ளித்தம்பம் ஊராட்சியில் நடைபெற்றுவரும் மக்கள் பங்களிப்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் நிகழ்வுகளிலும், மக்கள் பங்களிப்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் அணியிருக்கும் பேருதவியாகவும், உறுதுணை யாகவும், சுறுசுறுப்பாகவும் செயல்படுகிறார். மேலும் தனது பள்ளித்தம்பம் ஊராட்சியை தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தில் முதன்மை முன்மாதிரி கிராமமாக உருவாக்கி, தொழில் முனைவுகளையும் பொருள் வளத்தையும் பெருக்க உறுதிபூண்டு செயல்படுகிறார்.

தன்னம்பிக்கை தாரகை புவனேஸ்வரியின் முகவரி :
க. புவனேஸ்வரி, 33, வடக்குத் தெரு
பள்ளித்தம்பம் ஊராட்சி, காளையார்கோவில் வட்டம்,
சிவகங்கை மாவட்டம். கைப்பேசி எண்: 97875 95715

பணிபுரியும் மகளிருக்கு மகிழ்ச்சி தரும் திட்டம்

பணிபுரியும் பெண்களின் சிரமங்களைக் குறைக்கும் வகையில் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் மானிய விலையின் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தினால் பயன் பெற்ற பெண்கள் தங்களின் மகிழ்ச்சியை முற்றம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டம்

என் பெயர் வெள்ளையம்மாள், திருவண்ணாமலை நகராட்சி, சாரோன் பகுதி புது மேட்டுத் தெருவில் வசித்து வரும் நான் வழக்கறிஞர் ஒருவரிடம் கணினி தட்டச்சராக பணிபுரிந்து வருகிறேன். எனது வீட்டிலிருந்து நான் பணிபுரியும் அலுவலகம் 5 கி.மீ. தொலைவில் உள்ளது. சரியான போக்குவரத்து வசதியில்லாததால் நான் தினமும் அலுவலகத்திற்கு நடந்து சென்று வந்தேன். இது எனக்கு மிகவும் சிரமமாக இருந்து வந்தது. சொந்தமாக இருசக்கர வாகனம் வாங்குவதற்கு வசதியில்லை. இந்நிலையில் பணிபுரியும் மகளிருக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்குவது குறித்த செய்தியை நாளிதழில் பார்த்த நான், எனக்கும் இருசக்கர வாகனம் வாங்க விண்ணப்பித்தேன். எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு எனக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. தற்போது நான் எனது அலுவலகத்திற்கும் குறித்த நேரத்தில் சென்று வருகிறேன். என்னைப் போன்ற வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு மானிய விலையில் இருசக்கர வாகனம் வழங்கிய தமிழ்நாடு அரசிற்கும், வாழ்வாதார இயக்கத்திற்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டம்

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம், சோகண்டி கிராமத்தில் வசித்து வரும் என் பெயர் அலுமேலு. நான் பகுதி ஒருங்கிணைப்பாளராக பணிபுரிந்து வருவதால் பல கிராமங்களுக்கு சென்று மக்களை சந்திக்க வேண்டி உள்ளது. பஸ்சில் பயணம் செய்து சரியான நேரத்திற்கு சென்று எனது பணிகளை உரிய நேரத்தில் செய்து முடிக்க மிகவும் சிரமப்பட்டேன். அப்போது தான் மகளிர் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு அரசு வழங்கும் 'மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும்' திட்டம் குறித்து அறிந்து கொண்டு, அதற்காக விண்ணப்பித்தேன். எனக்கு ரூ. 25,000/– மானியத்தில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கப்பட்டது. தற்போது நான் எல்லா கிராமங்களுக்கும் யாருடைய உதவியையும் இல்லாமல் சரியான நேரத்திற்கு சென்று எனது பணியினை மேற்கொள்ள முடிகிறது. அம்மா இருசக்கர வாகனம் திட்டம் என் போன்ற பெண்களுக்கு பெரும் உதவியாக உள்ளது. இத்திட்டத்தின் மூலம் என் வாழ்க்கை முன்னேற்றம் அடைந்துள்ளது. இத்திட்டத்தை அறிமுகப்படுத்திய தமிழக அரசுக்கும், செயல்படுத்தி வரும் மகளிர் திட்டத்திற்கும் எனது நன்றி.

தூத்துக்குடி மாவட்டம்

மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் பெற்றுள்ள என்னுடைய பெயர் அருணாதேவி, சத்தியா நகர், சுந்தரவேல்புரம், தூத்துக்குடி என்ற முகவரியில் வசித்து வரும் நான் எனது வீட்டில் இருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ள அலுவலகம் ஒன்றில் பணிபுரிகிறேன். தினந்தோறும் வேலைக்குச் சென்று வர பேருந்திற்குக் காத்திருக்க வேண்டியிருந்தது. இதனால் சரியான நேரத்தில் வேலைக்கு சென்று வருவது சிரமமாக இருந்தது. தாமதமாகச் செல்வதினால் பதற்றமும், வேலையில் கவனமின்மையும் ஏற்பட்டது. இந்நிலையில் மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் எனக்கு வழங்கப்பட்டது. தற்போது பேருந்துக்காக காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லாததால் பள்ளிக்கு தினந்தோறும் சரியான நேரத்தில் சென்று வர முடிகிறது. மேலும் பணிகளை முடித்த பின்பு வீட்டு உபயோகப் பொருட்கள் வாங்குவது மற்றும் மருத்துவமனைக்குச் செல்வது போன்ற பணிகளை செய்வது எளிதாக உள்ளது. என் போன்ற பெண்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தை கொண்டு வந்ததற்காக தமிழக அரசுக்கும், வாழ்வாதார இயக்கத்திற்கும் மிகவும் நன்றி.

தமிழகத்தில் செயல்பட்டுவரும் முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் சுய உதவிக் குழுக்கள் குறித்த விபரங்களை ஆவணப்படுத்திட தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பிரதிநிதி வருகை

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) மற்றும் தேசிய வள நிறுவனம் (NRO) ஆகியவற்றின் சார்பில், புதுதில்லியிலிருந்து தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பிரதிநிதியான செல்வி. அங்கிதா அவர்கள் 17.02.2020 முதல் 20.02.2020 வரை முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் குழுக்கள் பற்றிய ஆவணப்படுத்துதல் சம்மந்தமாக திருச்சி மாவட்டத்திற்கு வருகை புரிந்தார்.

இந்நிகழ்வு சம்மந்தமான அறிவுரைகள் மற்றும் ஆலோசனைகளை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குனர் (திறன்

வளர்ப்பு) மற்றும் TNVRC–யின் செயலாளர் திருமதி. சரஸ்வதி கணேசன் அவர்கள் மற்றும் TNVRC / NRO–வின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. தீபா ராஜ்கமல் ஆகியோர் வழங்கினர்.

இந்தக் களப்பார்வைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் திருச்சி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனர் / இணை இயக்குனர் திரு. ம. சரவணன் அவர்களின் ஆலோசனை மற்றும் ஒத்துழைப்புடன் உதவி திட்ட அலுவலர்கள் திரு. சிவ சுப்பிரமணியன், திரு. சரவணன் மற்றும் களப்பணியாளர்கள் செய்திருந்தனர்.

ஆய்வின் முதற்கட்டமாக 18.02.2020 அன்று தொட்டியம் ஊராட்சி ஒன்றியம் மணல்மேடு கிராம ஊராட்சியில் செயல்படும் அன்னை தெரசா முதியோர் குழு மற்றும் சௌடேஸ்வரி முதியோர் குழுவின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டது. கலந்துரையாடல் முடிந்தவுடன் அவர்களின் இல்லங்கள் மற்றும் தொழில் செய்யும் இடங்களுக்கு நேரடியாகவே சென்று களப்பார்வை மேற்கொள்ளப்பட்டது. இங்கு செயல்படுத்தப்பட்டு வரும் அன்னம் ஆரோக்கியம் திட்ட உதவியின் மூலம் 12 ஆண்கள் மற்றும் 40 பெண் முதியவர்களுக்கு தினந்தோறும் மூன்று வேளை உணவு வழங்கப்பட்டு வருவதுடன், ஒவ்வொரு குழுவின் மூலமும் இரண்டு நபர்களுக்கு பராமரிப்பு உதவிகள் செய்யப்பட்டு வருகிறது என்ற விபரம் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து எம்.புத்தூர் கிராம ஊராட்சியில் செயல்பட்டு வரும் நீலவானம் முதியோர் குழுவின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டது. இக்குழுவினரின் சேமிப்பு, உள்கடன் மற்றும் திட்ட உதவிகள், செயல்பாடுகள், கருத்துக்கள் போன்றவை பகிர்ந்து கொள்ளப்பட்டது.

களப்பார்வையின் இரண்டாம் நாளான 19.02.2020 அன்று மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், அய்யம்பாளையம் கிராம ஊராட்சியில் செயல்படும் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் குழுக்கள் பார்வையிடப்பட்டது. மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 104 மாற்றுத் திறனாளிகள் குழுக்கள் தொடங்கப்பட்டுள்ளது. அய்யம்பாளையம் கிராம ஊராட்சியில் 9 மாற்றுத்திறனாளிகள் குழுக்கள் மற்றும் 1 முதியோர் குழு செயல்பட்டு வருகிறது.

புதுதில்லியிலிருந்து வருகை தந்த தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் பிரதிநிதியான செல்வி. அங்கிதா, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் உதவியுடன் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் குழுக்களின் செயல்பாடுகளிலும் இந்தியத் திருநாட்டின் முன்மாதிரி மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதாகவும் தெரிவித்ததுடன், தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் மற்றும் தேசிய வள நிறுவனத்தின் மூலம் திருச்சி மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் குழுக்களைப் போன்று, பிற மாநிலங்களிலும் தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் செயல்படுத்த பிற மாநிலங்களுக்கு உதவியும், ஒத்துழைப்பும் வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்கள்.

இந்தக் களப்பார்வையின் போது தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் மற்றும் தேசிய வள நிறுவனத்தின் சார்பாக மாநில வள மேலாளர் திரு. தா. தரணி மற்றும் உதவி வள மேலாளர் திரு. மு. ரமேஷ் ஆகியோர் உடனிருந்து திட்டத்தைப் பற்றி எடுத்துரைத்தனர்.

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (77,600 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

"எங்கள் வாழ்வும், எங்கள் வாழ்வாதாரமும்,
எங்கள் கையில் என சங்கே முழங்கு!"

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் திட்டத்தின் மூலம்,
நகர்ப்புற ஏழை, எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக
பல்வேறு திட்டங்களைத் தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது
பெருமைக் குரியது.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 1st Week of the every month

Goverment Of India

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ்

கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டம்

100%

வேலைவாய்ப்புக்கு

044-3047 8047

DDU-GKY
Deen Dayal Upadhyaya
Grameen Kaushalya Yojana
Empowering India • Powering the World

DEEN DHAYAL UPADHYAYA GRAMEEN KAUSHALYA YOJANA (DDU-GKY)

TAMIL NADU STATE RURAL LIVELIHOODS MISSION,
Tamil Nadu Corporation for Development of Women,
Mother Theresa Womens Complex - 3rd floor, Valluvar Kottam High Road,
Nungambakkam, Chennai - 600 034. Phone : 91-44-2817 3415
E-mail : ddugkytn2016«gmail.com / cooddugkytn«gmail.com